வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 21.12.2022 புதன்கிழமை இதழ் : 12 பக்கங்கள் : 16




## எந்தத் தேர்தலை சந்திக்கவும் தயார்!

கொழும்பு, டிசெ. 21

எந்தவொரு தேர்தலுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், எந்த ஆணையும் இன்றி தனிப்பட்ட ஒருவரின் தேவைகளின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய 15

## தேவை ஜனாதிபதி தேர்தலே! ரணில் வேட்பாளராக இருப்பார்!

### ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதி தேர்தலே நடத்தப்பட வேண்டியது அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல், மாகாண சபைகள் தேர்தல் அல்லது பாராளுமன்ற தேர்தல் என்று நாம் கூறி 15

## யாழ். மாநகர சபை பட்ஜெட் இன்று; ஈ. பி. டி. பி. எதிர்த்து வாக்களிக்கும்!



### மணிவண்ணன் பதவி இழக்கும் நிலை

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் இன்று புதன்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

இதனிடையே, வழக்கமாக மணிவண்ணன் தரப் 15

## மொட்டின் கோட்டை தகர்ந்தது!

கொழும்பு, டிசெ. 21

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டிலுள்ள குருநாகல் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 7 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ விதாரண சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 7 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் கிடைத்தன.

# திடீர் சந்திப்புக்குக் கூட்டமைப்பை இன்று அழைத்துள்ளார் ஜனாதிபதி!

## நேற்றும் சொல்ஹெய்ம் ரணிலை சந்தித்தார்

கொழும்பு, டிசெம்பர் 21

**இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு தொடர்பாக இன்று புதன் கிழமை கலந்துரையாடுவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகளை அழைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்துப் பேசினார். இந் நிலையிலேயே, இந்தத் திடீர் சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக கடந்த நவம்பர் 23ஆம் திகதி பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார். இதற்கு முன்னோடியா 15

## காலநிலை மாற்றத்தை தணிக்கும் முதலீட்டாளர்களை அழைக்க திட்டம்!



கொழும்பு, டிசெ. 21

காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் திட்டங்களில் ஒன்றாக அதனை தணிக்கும் வகையிலான செயல்பாடுகளை முன்னெடுக்கும் வெளிநாட்டு 15

## போதைப் பொருளுக்கான தேடுதலில் வெற்று உணவுபெட்டியே கிடைக்கிறது!



### கிளிநொச்சி வந்த எதிர்க்கட்சி தலைவர்

கிளிநொச்சி, டிசெ. 21

"தகவல் தொழிநுட்பம், தகவல் தொழிநுட்ப அறிவியல், செயற்கை நுண்ணறிவு எனப் புதிய போக்குகளால் இந்நாட்டில் பாடசாலைக் கல்வி கட்டமைப்பு முறையை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பைகளைப் போதைப் பொருளுக்காகத் தற்போதைய அரசு சோதனை செய்கின்றது. இதன்போது போதைப்பொருளுக்கு பதிலாக வெற்று உணவுப் பெட்டிகளைக் கொண்ட பைகளை மாத்திரமே காணக் 15

## அரசாங்கத்துக்கு எதிராக உருவாகிறது மெகா கூட்டு!

கொழும்பு, டிசெ. 21

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்காக அரசாங்கம் சட்டவிரோதமாக செயல்பட்டால், ஆட்சியாளர்களுடன் இல்லாத ஏனைய அனைத்துக் கட்சிகள் - அரசியல் குழுக்கள் ஒன்றிணைந்து கூட்டு ஒன்றை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாட் 15

## 10 மணிநேர மின் துண்டிப்பு அடுத்த வாரம் முதல் வரலாம்!

### மின் பொறியியலாளர் சங்கம்


கொழும்பு, டிசெ. 21

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் 10 மணி நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். இதனால், நாடு செயலிழக்கக் கூடும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத் தலைவர் நிஹால் வீரரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

31ஆம் திகதியுடன் நாட்டின் நிலக்கரி கையிருப்பு தீர்ந்துவிடும். இதனால், 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு கிடைக்காமல் போகும். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தை இயக்க வருடத்துக்கு 38 கப்பல் நிலக்கரி தேவை. இலங்கை நிலக்கரி 15

## இலங்கை ஜனாதிபதி, பிரதமருடன் மோடி தொடர்ந்து தொடர்பிலுள்ளார்!



### இந்திய வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, டிசெ. 21

"பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் ஜனாதிபதி, பிரதமருடன் தொடர்ந்தும் தொடர்பில் இருக்கிறார்", என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மக்களவை கூட் 15

## புலிகளை மீளுருவாக்க முயற்சியாம் 9 ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் கைது! 04

## இப்படியும் நடக்கிறது...!

மூத்த ஊடகவியலாளர் விக்டர் ஐவன் சிங்கள மக்கள் மத்தியில் மதிப்புமிக்க ஒருவர். அவர் நடத்திய ராவய பத்திரிகை இந்த நாட்டில் பல மாற்றங்களை நிகழ்த்தியிருக் கின்றது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் அவர்களுக்கு எதிராக தயவுதாட்சண்யம் இன்றி விமர்சனங் களை முன்வைப்பவர் அவர். அதிலும் குறிப்பாக பஸில் ராஜபக்ஷவுக்கு அவர் ஒரு சிம்மசொப்பனம்.

அண்மையில், ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு காரண மான மக்கள் போராட்டம் தொடர்பில் நீண்ட ஆய்வை செய்த அவர், தனது ஆய்வின் முடிவில் நாடு எத்தகைய மாற்றங்களை எதிர்கொள்ளவேண்டும் என்பது தொடர்பாக தனது யோசனைகளை அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்து வருகின்றார். அவரின் பணியில் சமூக ஆர்வலர்கள் பலர் இணைந்திருக்கின்றனர். அவர்களில் முக்கியமான ஒருவர் மலையகத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லிகைப்பூச்சந்தி திலகர். அண்மையில், அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம். பி. சுமந்திரனை அவரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

பின்னர் நாற்பத்து மூன்றாவது படையணியின் தலைவர் பாட்டாளி சம்பிக்க ரணவக்கவையும் சந்தித்திருந்த செய்திகள் வெளிவந்திருந்தன.

விக்டர் ஐவனிடமிருந்து பொதுஜன பெரமுன அலுவல கத்துக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பு ஒன்று அங்கிருந்தவர்களை ஆச்சரியமடைய வைத்திருக்கின்றது.

அதற்குக் காரணம் வேறு ஒன்றுமல்ல, 'நான் பஸில் ராஜபக்ஷவை சந்திக்க விரும்புகின்றேன்' என்று அவர் தொலைபேசியில் கேட்டபோது அங்கிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டதில் தவறில்லைத்தான்.

எப்போதும் பஸில் ராஜபக்ஷவை 'வறுத்து' எடுக்கும் ஒருவர் அவரைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டால் யாருக்குத்தான் ஆச்சரியம் வராது.

விடயம் பஸிலுக்கு தெரிவிக்கப்பட்டபோது, 'அதற்கு என்ன, எல்லோரும்தான் திட்டுகிறார்களே. அவரின் திட்டுகளையும் கேட்டுத்தான் பார்ப்போமே' என்று பதில ளித்திருக்கிறார் பஸில்.

விக்டர் ஐவன் வழக்கம்போல மற்றுமோர் ஊடக வியலாளருடனும் சமூக சேவகருடனும் பஸிலை அவரின் அலுவலகத்தில் சந்தித்திருக்கிறார்.

நெலும் மாவத்தையிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பஸில் ராஜபக்ஷவுடன், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார, மற்றும் சஞ்சீவ எதிரிமன்ன ஆகியோரும் இருந்திருக்கின்றனர். இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரமாக இடம்பெற்றிருக்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலேயே மக்கள் வீதிக்கு வந்தனர் என்றுதான் எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கின்றனர். மக்களின் அந்த கோபத்தை சில வெளி சக்திகளும் பயன்படுத்தின என்றும் நம்பப்படுகின் றது. இவற்றுக்கு மேலாக பலரும் கவனிக்காத மற்றுமொரு பிரச்னைதான் முக்கிய காரணமாகியிருக்கின்றது என்பதை தனது ஆய்வில் கண்டறிந்திருக்கிறார் விக்டர் ஐவன். அது, சாதிய அழுத்தமே முக்கிய காரணியாக இருந்திருக்கின்றது என்பதே.

போராட்டம் குறித்து தான் மேற்கொண்ட விரிவான ஆய்வில் வலுவான சமூகப் பிரச்னையாக உள்ள சாதிய ஒடுக்குமுறையே பிரதான பங்குவகித்தது தெரியவந்திருப்ப தாகவும், இந்த சாதிய ஒடுக்குமுறையை ஒழிக்க அரசியல் கட்சிகள் தலையிடவேண்டும் என்றும் விக்டர் ஐவன் இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ராஜபக்ஷக்கள் கொய்கம என்ற சாதியைச் சேர்ந்தவர் கள். கொய்கம சாதிக்கு எதிராக நாட்டின் ஏனைய சாதியினரால் முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சியாகவே இந்தப் போராட்டத்தை தான் தனது ஆய்வில் கண்டறிந்ததாகவே விக்டர் ஐவன் விளக்கிக் கூறியிருக்கிறார்.

ஆக, சாதிய பாகுபாடு என்பது ஏதோ யாழ்ப்பாணத்தில் மாத்திரமே உச்சம்பெற்றிருப்பதாக தெற்கிலுள்ள சில நண்பர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால், அது முழு இலங்கையையும் பாதித்திருக்கின்றது என்பது விக்டர் ஐவனின் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்திருக்கின்றது.!

சிங்கள சமூகத்திலுள்ள இந்த சாதிய பாகுபாடுகள் தொடர்பாக இன்னுமொரு நாளில் பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# வடக்கு நூலகங்களுக்கு நூல்கள் யாழ். மாநகர சபை வழங்கியது!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொது நூலகத் தில் மேலதிகமாக உள்ள புதிய புத்தகங்களை வட மாகாணம் முழுவதும் நூல கங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை பொது நூலகத்தில் காணப் படும் மேலதிகமான புதிய புத்தகங் களை ஏனைய நூலகங்களின் பயன்பாட்டுக்கு வழங்குவது தொடர்பான பிரேரணை யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணனால் முன் மொழியப்பட்டு அது உறுப்பி னர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டி ருந்தது.

இந் நிலையில், அந்த செயல் திட்டத்தின் முதற் கட்டமாக 17 பாடசாலை நூலகங்கள் மற்றும் 14 பிரதேச சபைக ளுக்கு உரிய 31 நூலகங்களுக்கு நேற்று 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ண



னால் வழங்கப்பட்டது.

இதன்போது, "எதிர்வரும் காலங்களிலும் புத்தகங்கள் தேவைப்படும் நூலகங்கள் அதற்கான கோரிக்கை கடிதங் களை வழங்கும்பட்சத்தில் அந்த நூலகங்களுக்கும் புத்த கங்கள் வழங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும்", என்று மாநகர முதல்வர் உறுதியளித்தார்.

யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் வி.மணி வண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ. த. ஜெய சீலன் பொது நூலக பிரதம நூலகர், பாட சாலை, பிரதேச சபைகளின் நூலகர்கள் ஆகியோர் கலந்து கொண்ட னர். (ஐ)

## கூட்டுறவு சங்கத்தின் ஒளிவிழா இன்று!

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாண பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஒளி விழாவும் வருட இறுதி பிரியா விடையும் பணியாளர் சேவை நலன் பாராட்டு விழா வும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் ச. லோகசிவம் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தின ராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையா ளர் கி. சந்திரசேகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஏ. ஜே. ஜாவிஸ் வழங்குவார். சிறப்பு விருந்தின ராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. ரூத்சாலினி கலந்துகொள்ள வுள்ளார். (ஐ)

## டெங்கு நோயின் தாக்கம் அடுத்த ஆண்டு உயரும்

கொழும்பு, டிசெ. 21

இந்த வருடத்தை விட அடுத்த வருட ஆரம்ப காலப் பகுதியில் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை அதிகம் பதி வாகும் அபாயம் இருப்பதாக சுகாதார பூச்சியியல் அதிகாரி கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் திஸங்க திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பூச்சியியல் அதிகாரிகள் வழங்கும் தரவுகள் முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்ப தில் சிக்கல் இருக்கிறது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான கொள்கை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண் டும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## வளலாயில் அடாவடி குழு வீடு ஒன்றின்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

வீடு ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத சிலர் வீட்டின் யன்னல் கண்ணாடி களை அடித்து நொறுக்கியது டன், சொத்துகளுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இரவு 11:45 மணியளவில் வளலாயில் இடம்பெற்றுள்ளது.

முகத்தை மறைத்து கறுப்பு துணி கட்டிக் கொண்டு மோட் டார் சைக்கிள் வந்த 15 பேர் கொண்ட குழுவினர் இந்த அடா வடியில் ஈடுபட்டுள்ளனர்.

முதலில் அவர்கள் வீட்டின் வெளிக் கதவை அடித்து டைத்து உள்ளே நுழைந்து, மோட்டார் சைக்கிளையும் அடித்துடைத்து சேதம் விளைவித்ததுடன் பெற்றோல் குண்டையும் வீசித் தாக்கினர். அத்துடன், யன்னல் கண்ணாடி களையும் அடித்து நொறுக்கி விட்டு சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. அத்துடன், சந்தேக நபர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## அச்சுவேலி பாடசாலையின் மாணவர்களுக்கு சீன அரிசி!



யாழ்ப்பாணம், டிசெ. 21

அச்சுவேலி ஆரம்ப பாட சாலை மாணவர்களுக்கு சீன அரசாங் கத்தின் உதவி திட்டத் தின் கீழ் இறக்குமதி செய்யப் பட்ட அரிசி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சிவலிங் கம் சதீஸ்வரன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் 270 மாணவர்களுக்கு அரிசிப் பொதி வழங்கி வைக்கப்பட்டது.

10 கிலோ எடை உள்ள அரிசி பொதிகள் மாணவர்க ளுக்கு வழங்கி வைக்கப்பட் டது. (ஐ)

## ஜெய்ப்பூர் நிறுவனத்தின் விசேட அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந் தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரை வருடாந்த விடுமுறைக்காக மூடப்பட்டி ருக்கும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நிறுவனத் தின் செயல்பாடுகள் வழமை போன்று இடம்பெறும் என்று அந்த நிறுவனத்தின் மருத்துவர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
21.12.2022 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எரிக் சொல்ஹெய்ம் என்ன செய்ய முயற்சிக்கின்றார்?

தமிழர்களுக்கு அதிகம் அறிமுகமானதொரு வெளிநாட்டவரின் பெயரென்றால், அது எரிக் சொல்ஹெய்மாகத்தான் இருக்கமுடியும். அந்தளவுக்கு அவர் தொடர்பில் தமிழர்கள் மத்தியில் அறிமுகம் உண்டு. எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இலங்கையின் அரசியல் சூழலுக்குள் பிரவேசித்திருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை ஆலோசகராகப் பிரவேசித்திருக்கும் அவர் - சில தினங்களாக முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரை சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார். காலநிலை ஆலோசகர் ஒருவருக்கு இவ்வாறான சந்திப்புகள் தேவையற்றன. எனினும், அவர் இவ்வாறான சந்திப்புகளில் ஈடுபடுவதானது அரசியல் சூழலில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னையை தீர்க்கவுள்ளார் என்று கூறிவரும் சூழலில்தான், சொல்ஹெய்மும் இவ்வாறான சந்திப்புகளை மேற்கொண்டிருக்கின்றார். இதேவேளை, சர்வகட்சி மகாநாடு அரசியல் தீர்வை காண்பதற்கான ஒரு சிறந்த ஏற்பாடென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

நோர்வேயின் சமாதான பங்களிப்பு தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் உண்டு. புலம்பெயர் சூழலிலுள்ள ஒரு குறிப்பிட்ட தரப்பினர் மத்தியில் சொல்ஹெய்ம் தொடர்பிலும் கடுமையான விமர்சனங்களுண்டு. அதாவது, பேச்சு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து நோர்வே சாதாரணமாக விலகிக்கொண்டது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பொறுப்புச் சொல்லும் கடப்பாட்டை நோர்வே சரிவர முன்னெடுக்கவில்லை - புலிகள் மீதே குற்றஞ்சாட்டியது என்றவாறான விமர்சனங்கள் தமிழ் சூழலில் உள்ளன. நோர்வேயை பொறுத்தவரையில் தாங்கள் வெறும் மத்தியஸ்தர் மட்டுமே பேச்சில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களும் யுத்தத்தை தெரிவுசெய்த போது தங்களால் என்ன செய்யமுடியுமென்றவாறு கைவிரிக்கின்றது.

சிங்கள அடிப்படைவாதிகளை பொறுத்தவரையிலும் சொல்ஹெய்ம் தொடர்பில் கடுமையாக விமர்சிப்போருண்டு. அவர்களைப் பொறுத்தவரையில் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர். அவர் நாட்டை பிரிக்கும் சதிமுயற்சிக்கு உடந்தையாகவே நாட்டுக்குள் பிரவேசித்தார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், சொல்ஹெய்மை சிங்கள - பௌத்த தேசியவாத தரப்பினர் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவராக நோக்குகின்றனர். மாறாக, தமிழ் தேசிய தரப்புக்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்துக்கு ஆதரவானவராக நோக்குகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் சொல்ஹெய்மால் அரசியல் தீர்வுக்கு எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியுமென்பது கேள்விதான்.

எனினும், இலங்கையின் விடயங்களில் அனுபவமும் - அறிவுமுள்ள ஒரு வெளிநாட்டவராகவே சொல்ஹெய்மை பலரும் நோக்குகின்றனர். அதே வேளை, சொல்ஹெய்ம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டும் காலநிலை ஆலோசகராக செயல்படவில்லை. அவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் காலநிலை ஆலோசகராக தொழில்படுகின்றார். இந்த விடயங்கள் எவ்வாறான பின்புலத்தில் இடம்பெறுகின்றன என்பதிலும் தெளிவான பதில் இல்லை. ஆனால், தற்போது சொல்ஹெய்ம் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்திப்பத்தை உற்று நோக்கினால், அவர் மீளவும் இலங்கை அரசாங்கத்தின் ஓர் அழைப்பாளராக அரசியல் தீர்வு விடயத்தில் ஈடுபட முயற்சிப்பதான ஒரு தோற்றமே தெரிகின்றது.

சொல்ஹெய்ம், சமாதான பேச்சின் மத்தியஸ்தராக தொழில்பட்ட காலத்திலும் அதன் பின்னரும் இந்தியாவின் முக்கியத்துவம் தொடர்பில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றார். 2009இற்கு பின்னர் அவர் வழங்கிய பல நேர்காணல்களில் ஒரு விடயத்தை அழுத்திக் குறிப்பிட்டிருந்தார். அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால், வெளிநாட்டவர்கள் இலங்கை விடயத்தில் அளவுக்கு அதிகமாக தலையீடு செய்வதை அடிப்படையில் இந்தியா விரும்புவதில்லை. இது பிராந்திய சக்திகளின் இயல்பாகும். எந்தவொரு பிராந்திய சக்தியும் தனது அயல்நாடுகளின் உள்பிரச்னையில், பிற பிராந்தியங்களை சேர்ந்த நாடுகள் தலையீடு செய்வதை விரும்பாது. நோர்வேயின் மத்தியஸ்தத்தின்போது, இந்தியா வெளிப்படையாக எதனையும் கூறாதுவிட்டாலும்கூட, நோர்வேயின் மத்தியஸ்தம் வெற்றிபெறப் போவதில்லை என்பதை இந்தியா அறிந்தே இருந்தது. அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜஸ்வந்த் சிங்கை சொல்ஹெய்ம் முதன் முதலாக சந்தித்த போது, அவர் தெரிவித்திருந்த கருத்துக்களே இதற்கு சான்று. "பத்து வருடங்களை செலவழித்தால்கூட, நீங்கள் ஒரு பங்களிப்பை வழங்கியவர்களாக மட்டுமே இருக்க முடியும். ஏனெனில், இது ஒரு சிக்கலான பிரச்னையாகும்", என்று யஸ்வந்த் சிங் அப்போது குறிப்பிட்டிருந்தார். சிங் அப்போது கூறியதை தான் பின்னரே புரிந்துகொண்டாரென சொல்ஹெய்ம் பதிவு செய்திருக்கின்றார்.

சொல்ஹெய்ம் எவ்வாறானதோர் அரசியல் தீர்வு என்றாலும் அது உள்நாட்டுக்குள் பேசுவதன் மூலம் மட்டுமே பெறமுடிமென்பதை நம்பும் ஒருவராகவே தெரிகின்றார். அவர் அண்மைக் காலத்தில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பில் தெரிவித்திருக்கும் கருத்துக்களை அவதானித்தால், இவ்வாறானதொரு பார்வையே மேலோங்கி இருக்கின்றது.

# சிங்கள கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்!



*யாழ்ப்பாணம், டிசெ. 21*

இந்து - பௌத்த கலாசார பேரவை நடத்தி வரும் இரண்டாம் மொழி - சிங்கள இலவச கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண இந்து - பௌத்த பேரவை தலைமை அலுவலகத்தில் அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் தேசமான்ய எம். டி. எஸ். இராமச்சந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில், இரண்டாம் மொழிக் கற்கையைப் பூர்த்தி செய்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த இந்து - பௌத்த பேரவையின் பொதுச் செயலாளர் எம். டி. எஸ். இராமச்சந்திரன், அடுத்த வருட நடுப் பகுதியில் வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இலங்கை மாணவர்கள் உயர் கல்வியை கற்பதற்கான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# இலவச மருத்துவ முகாம் முக்கொம்பனில் நடந்தது



*கிளிநொச்சி, டிசெ. 21*

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 2016ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் "வித்தியாலயத்தின் விழுதுகள் 2016" அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை பூநகரி முக்கொம்பனில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 250இற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இந்த இலவச மருத்துவ முகாமுக்கு எழுகை அமையம் நிதி அனுசரணை வழங்கியது. கண், பற்சிகிச்சைகளுக்கான அனுசரணையை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அமைப்பும் வழங்கியிருந்தது. இதன் போது, கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பணியாளர்களுடன் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவர்களும் மருத்துவ குழாமினரும் இந்த மருத்துவ முகாமை நடத்தியிருந்தனர். (ஐ)



# வில்லிசை கலைஞர் விஜயநாதன் காலமானர்!

*யாழ்ப்பாணம், டிசெ. 21*

ஈழத்தின் புகழ்பூத்த சின்னமணி வில்லிசைக் குழுவின் பிரதான பக்கபாட்டு நகைச்சுவை மற்றும் நகைச்சுவை நாடக கலைஞர் அம்பிகாபதி விஜயநாதன் காலமானார்.

அச்சுவேலியில் உள்ள அவருடைய வீட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவர் காலமானார். நேற்றைய தினமே அவரின் இறுதிக் கிரியைகளும் நடைபெற்றன.

அழிந்து வரும் தமிழர்களின் தொட்டுணர முடியாத மரபுரிமைகளினுள் ஒன்றான வில்லிசைக் கலையை நிலைநிறுத்திய கலைஞர்களுள் சின்ன கலைவாணர் சின்னமணியுடன் இணைந்து விஜயநாதன், ஈழத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பல அரங்குகள் மூலமாக மக்களின் மனம் கவர்ந்த கலைஞராகவும் நகைச்சுவையுடன் இணைந்து இலகுவாக சமூகத்துக்கு செய்தியை எடுத்துச் சொல்லும் கலைஞராகவும் நெறியாளர் ஆகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**டிசெம்பர் - 21** புதன்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 06
நல்ல நேரம் : 09.30 - 10.00
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோதசி




**மேடம்**
இரண்டு நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவீர்கள்.

**இடபம்**
குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். மகிழ்ச்சியான நாள். பழைய வழக்கு ஒன்று உங்களுக்கு சாதகமாகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பணியாளர்களின் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும்.முயற்சிகளில் இருந்து வந்த தடை விலகும்.

**கடகம்**
உங்கள் செயல்களில் சில தடை ஏற்படும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஒரு செயலில் போராடி வெல்வீர்கள். வியாபாரத்தில் போட்டியை சந்திப்பீர்கள்.லாபம் உண்டாகும்.

**சிம்மம்**
துணிச்சலுடன் செயல்பட்டு செயலில் லாபம் காண்பீர்கள். உங்கள் எண்ணம் நிறை வேறும். மற்றவரால் செய்ய முடியாத செயலை செய்து சாதனை செய்வீர்கள். செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி**
திருமணத்திற்கு வரன் தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். வருமானத்தில் இருந்த தடை விலகும். வியாபாரத்தை விரிவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்**
நிதானம் தேவை.செயல்களில் தடுமாற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வந்து சேருவார்கள். உங்கள் எண்ணம் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
வரவுகள் அதிகரிக்கும் என்றாலும் திடீர் செலவுகளால் சங்கடம் உண்டாகும். உழைப்பின் வழியே உங்கள் செயல்களில் சாதகமான நிலை ஏற்படும். வாகன வகையில் செலவு உண்டாகும்.

**தனுசு**
எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். நிதிநிலை உயரும்.தொழிலை விரிவு செய்வீர்கள். உங்கள் முயற்சிக்கு பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மகரம்**
வேலைக்காக முயற்சி செய்து வந்தவர்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் வரும். தொழிலை விரிவு செய்வதற்காக எதிர்பார்த்த பணம் உங்கள் கைக்கு வந்து சேரும்.

**கும்பம்**
புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். வரவு அதிகரிக்கும். வரவேண்டிய பணம் இன்று மொத்தமாக வந்து சேரும். புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மீனம்**
புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்கள் தாமதமாகும். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளில் கவனமுடன் செயல்படுங்கள். பணியாளர்கள் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

# திருச்சி சிறப்பு முகாமிலிருந்த 9 இலங்கை தமிழர்கள் கைது!

*திருச்சி, டிசெ. 21*

விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க ஆயுதங்கள், போதைப் பொருட்களை கடத்த முயன்ற வழக்கில் இலங்கையைச் சேர்ந்த 9 பேரை தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ) அதிகாரிகள் திருச்சி சிறப்பு முகாமில் கைது செய்தனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை தங்க வைப்பதற்காக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் செயல்பட்டு வருகிறது. இங்கு இலங்கைத் தமிழர்கள் 80 பேர் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் வகையில் பாகிஸ்தானிலிருந்து இந்தியா மற்றும் இலங்கைக்கு ஆயுதங்கள், போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றன என்று கூறி தேசிய புலனாய்வு முகமை கடந்த ஜூலை 8ஆம் திகதி வழக்கு பதிவு செய்தது.

இது தொடர்பாக திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களான குணசேகரன், புஷ்பராஜா என்ற பூக்குட்டி கண்ணா மற்றும் ஆயுதங்கள், போதைப் பொருள் விற்பனையாளரான பாகிஸ்தானைச் சேர்ந்த ஹாஜி சலீம் உள்ளிட்டோருக்கு தொடர்பு இருப்பதாகக் கூறி 22 இடங்களில் சோதனை நடத்தியது.

திருச்சி சிறப்பு முகாமில் நடந்த சோதனையில் கைபேசிகள், சிம் அட்டைகள், மடிக் கணினிகள், வன்தட்டுக்கள் எனப் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று திருச்சி சிறப்பு முகாமுக்கு சென்ற அதிகாரிகள் குழு குணசேகரன் என்ற பிரேம்குமார், புஷ்பராஜா என்ற பூக்குட்டி கண்ணா, முகமது ஆஸ்மின், அழக பெருமக சுனில் காமினி பொன்சேகா என்ற கோட்ட காமினி, ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ என்ற பொம்மா, தனுகா ரோஷன், லடியா, காமேஷ் சுரங்கா பிரதீப் என்ற வெள்ளை சுரங்கா, திலீபன் ஆகிய 9 பேரிடம் மீண்டும் விசாரணை நடத்தினர்.

அப்போது, ஏற்கெனவே தொடரப்பட்ட ஆயுதக் கடத்தல் வழக்கில், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருப்பதாகவும் 9 பேரையும் கைது செய்ய வந்திருப்பதாக என். ஐ. ஏ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, வெளிநாட்டினருக்கான சிறப்பு முகாம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் என்ஐஏ எஸ்.பி தர்மராஜ் உள்ளிட்ட அதிகாரிகள், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குச் சென்று ஆட்சியர் மா. பிரதீப் குமாருடன் ஆலோசனை நடத்தினர். அப்போது, 9 பேர் மீதுள்ள வழக்கு விவரங்கள், கைது செய்வதற்கான உரிய ஆவணங்களை ஒப்படைக்கும்படி ஆட்சியர் கேட்டார்.

இதையடுத்து ஆவணங்களை அதிகாரிகள் வழங்கினர். இதையடுத்து, அவர்களை கைது செய்ய மாவட்ட ஆட்சியர் அனுமதியளித்தார். இதையடுத்து 9 பேரும் நேற்று கைது செய்யப்பட்டனர். (ஐ)

# “தமிழ்நாட்டின் எல்லைகளை கேரள அரசு அபகரிக்கிறது!”

*சென்னை, டிசெ. 21*

தமிழகத்துக்குள் கேரள அரசு தனது எல்லையை விரிவாக்கி, நில அபகரிப்பு செய்வதை தமிழக அரசு கண்டு கொள்ளாமல் இருக்கிறது என்று பா. ஜ. க.தலைவர் அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசுவெள்ளை அறிக்கை வெளியிடாவிட்டால் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கேரள அரசு, டிஜிட்டல் நில அளவீடு திட்டம் - ‘எண்டே பூமி’ என்ற பெயரில், தமிழக - கேரள எல்லை பகுதிகளில் நில அளவீடு செய்து, கேரள மாநில எல்லையை தமிழக எல்லைக்குள் விரிவாக்கி வருகிறது. இதை, தமிழக அரசு அதிகாரிகளும், முதல்வர் ஸ்டாலினும் கண்டுகொள்ளாமல் இருப்பது கவலை அளிக்கிறது.



வருவாய் பதிவு, கணக்கெடுப்பு துறைகளின் தகவல்கள் மூலம், ஒரு புதிய டிஜிற்றல் தரவு தளத்தை கேரள அரசு உருவாக்கி வருகிறது. கேரள அரசு அறிவிப்பின்படி, புதிய கணக்கெடுப்பு வரைபட பணி முடிந்ததும், ஒவ்வொரு நபரின் நிலத்தின் அதிகாரபூர்வ பதிவு, கேரள எல்லைக்குள் சென்று விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கேரள அரசு நில அபகரிப்பு செய்வதை தமிழக அரசு கண்டு கொள்ளாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது. கேரளாவில் இருந்து கோழி, மாமிச, மருத்துவக் கழிவுகளை கொண்டுவந்து தமிழக எல்லைகளில் கொட்டுவது, தமிழக நீர்நிலைகளை பாழ படுத்துவது, தமிழக கனிம வளங்கள், ஆற்று மணலை கடத்துவது என கேரளாவின் தொடர் அத்துமீறல்கள், தமிழக நலன்களை பாதிக்கின்றன.

தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, இது பற்றிய வெள்ளை அறிக்கையை மக்கள் மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், தமிழக எல்லையை மீட்க பா. ஜ. க. போராட்டம் நடத்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழை வளர்க்க வேண்டும்! நீதிமன்றம் அரசுக்கு உத்தரவு!

*மதுரை, டிசெ. 21*

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் எட்டிமங்கலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஸ்டாலின், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், “தமிழ் வளர்ச்சிக்குத் தேவையான தமிழ் புத்தகங்கள், தமிழ் ஆராய்ச்சி புத்தகங்கள், தமிழ் மொழி வளர்ச்சியுடன் தொடர்புடைய பிற மொழி புத்தகங்கள் ஆகியவற்றை மதுரை உலக தமிழ்ச் சங்க நூலகத்தில் வைக்க அரசுக்கு உத்தரவிடவேண்டும். என்று கோரப்பட்டிருந்தது.

இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, மதுரை உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் முன்னிலையாகி ”மதுரை உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் 26 ஆயிரத்து 35 புத்தகங்கள் உள்ளன. இங்கு நூலகம் அமைக்க ரூ.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது” என தெரிவித்தார். இதையடுத்து நீதிபதிகள் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

இந்த நிலையில் இவ்வழக்கில் நீதிபதிகள் மகாதேவன், சத்ய நாராயண பிரசாத் அமர்வு நேற்று பிறப்பித்த உத்தரவில், ”தமிழ் மொழியை வளர்க்க தமிழக அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு தேவையான நிதியை ஒதுக்க வேண்டும். சங்க கால தமிழ் இலக்கியங்களையும், நவீன கால தமிழ் இலக்கியங்களையும் பிரபலப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்வுகளை தமிழக அரசு முன்னெடுத்துச் செல்ல வேண்டும்” என குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

ஹங்வெல்லை துப்பாக்கிச் சூடு;

# சந்தேகநபர் பயணித்த மோ.சைக்கிள் சிக்கியது!

கொழும்பு, டிசெ. 21

ஹங்வெல்லை பகுதியில், உணவக உரிமையாளர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதற்காக பிரவேசித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹங்வெல்லை - பஹத்கம பகுதியில் உள்ள குறுக்கு வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் குறித்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.

குறித்த மோட்டார் சைக்கிள் அடிச்சட்ட இலக்கம் மற்றும் இயந்திர இலக்கம் என்பன அழிக்கப்பட்டுள்ளமை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்திக் கொல்லப்பட்டவர் ஹங்வெல்லை பொலிஸ் பொது பாதுகாப்புக் குழு அங்கத்தவராவார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கட்டணம் செலுத்தாதோரின் நீர் விநியோகம் துண்டிப்பு

கொழும்பு, டிசெ. 21

கட்டணம் செலுத்தத் தவறிய பாவனையாளர்களுக்கான நீர் விநியோகம் அடுத்த மாதம் முதல் துண்டிக்கப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

ரூ. 8,000 மில்லியன் வரை காணப்பட்ட நிலுவைத் தொகை, 4000 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் 6,000 மில்லியன் ரூபா கட்டணம் நிலுவையில் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவி பொதுமுகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க குறிப்பிட்டார்.

இந்நிலையில், 60 நாட்களுக்கு மேல் கட்டணம் செலுத்த தவறிய அனைத்து பயனாளர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 08 இலட்சம் மக்கள் 03 மாதங்கள் அல்லது அதற்கும் அதிக நாட்கள், நீர் கட்டணம் செலுத்த தவறியுள்ளதாக ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்தார். (அ)

# விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 21

2021-2022 பெரும்போகத்தில் பயிர்செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க விவசாய மற்றும் விவசாய பாதுகாப்புச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, அரசாங்கத்தினால் 657 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் 31, 613 விவசாயிகளால் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான 42,934 ஏக்கர் நிலத்துக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த பெரும்போகத்தில் அதிக பாதிப்புக்குள்ளான அநுராதபுரம் மாவட்டத்துக்கு 81 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

# மோட்டார் சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 21

தோட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பட்டப்பகல் நேரத்தில் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் புலோலி மந்திகைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தோட்டத்தில் புகையிலை நாற்றுக்களை நாட்டிக் கொண்டிருந்தபோது அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இந்துக் கோயில் பிரச்னைகளை எங்களுக்குள் தீர்க்கவேண்டும்!

## மாவிட்டபுரம் ஆலய ஆதீன குரு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 21

இந்துக்களுக்கிடையில் ஏற்படும் பிரச்னைகளை நாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என மாவிட்டபுரம் முருகன் ஆலய ஆதீன குரு ரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நாவலர் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைநகர் திண்ணபுரம் சிவன் ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்வதா? திருவம்பாவை உற்சவத்தை நடத்துவதா? என்பது தொடர்பில் எழுந்த சர்ச்சையினால், மாவிட்டபுரம் பிரதம குரு மற்றும் மேலும் சில குருமாரை நேரில் சென்று



ஆராய்ந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் ஈழத்து சிதம்பர ஆலய நிலைமை தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்து அங்கு நிலைமைகளை அவதானித்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நாங்கள் நீதிமன்றத்துக்கு செல்லவேண்டியுள்ளது.

எனவே இந்து மக்களுக்கு நான் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். எமது இந்து கோயில்களில் அல்லது எமது இந்து மக்களுக்கு இடையிலான பிரச்னையை நாங்களே தீர்க்கவேண்டும். அடுத்தவரிடமோ அல்லது நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு தரப்பிடமோ செல்லக்கூடாது. இந்த விடயத்தை இந்து மக்களாகிய அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

வரலாற்று பிரசித்தி பெற்ற பாடல் பெற்ற தலமான ஈழத்து சிதம்பரத்தில் இவ்வாறான நிலைமை இருக்கின்றது. எனவே எமது இந்து மக்களுக்கிடையில் உள்ள பிரச்னைகளை நாங்களே தீர்க்கவேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்-என்றார். (அ)

# புலம்பெயர் பணியாளர்களுக்கு குறைந்த வட்டியில் வீட்டுக்கடன்

கொழும்பு, டிசெ. 21

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களுக்கு வீட்டுக் கடன்களை பெற்றுக்கொடுக்கும் புதிய வேலைத்திட்டம் எதிர்வரும் சில நாட்களில் நடைமுறைப் படுத்தப்படும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.



இது தொடர்பில் வங்கித்துறை மற்றும் இலங்கை மத்திய வங்கியுடனான கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நடைபெற்ற சர்வதேச புலம்பெயர்ந்தோர் தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனை கூறினார்.

புதிய வேலைத்திட்டத்தின் கீழ், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் ஏனைய மக்களை விட குறைந்த வட்டி வீதத்தில் வீட்டுக் கடனைப் பெற முடியும். இதே வேளை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மேற்கொள்ளும் பணப்பரிமாற்றத்துக்கு ஏற்ப வழங்கப் படவுள்ள தீர்வையில்லா கொடுப்பனவு இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

உத்தேச தீர்வையில்லா கொடுப்பனவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு 4 மாதங்கள் கடந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உத்தேச கொடுப்பனவு திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு 4 மாதங்கள் கடந்துள்ளபோதிலும், நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# சமுர்த்தி கொடுப்பனவு பெற சென்ற காரைநகர் மூதாட்டி வீட்டில் திருட்டு!

யாழ்ப்பாணம், டிசெ. 21

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் - களபூமியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 3 1/2 பவுண் தங்க நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டில் தனியாக வசித்துவந்து 72 வயதுடைய மூதாட்டி சமுர்த்திக் கொடுப்பனவை பெறுவதற்காக நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிரதேச செயலகத்துக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் வீட்டுக்குச் சென்ற திருடர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று நகைகளையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் களபூமி பொலிஸ் காவலரணில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# முட்டை விலை தொடர்பில் சட்ட நடவடிக்கை சரிவராது

## நுகர்வோர் அதிகார சபை கூறுகிறது

கொழும்பு, டிசெ. 21

பண்டிகை காலத்தில் நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் சந்தைகளில், சோதனை நடவடிக்கைகளை நடத்துகின்றபோதிலும் முட்டை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என நுகர்வோர் அதிகார சபை, தமது சட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே சில பிரதேசங்களில் முட்டைகளின் விலை மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சில இடங்களில் 65 ரூபாவுக்கும் முட்டை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக, முட்டைக்கான ஆகக்குறைந்த சில்லறை விலையை நிர்ணயித்து கடந்த ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானிக்கு அமைய, வெள்ளை முட்டையின் விலை 43 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் விலை 45 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் குறித்த வர்த்தமானியை ரத்து செய்து, முட்டைக்காக ஆகக்குறைந்த சில்லறை விலையை அன்றைய தினமே நிர்ணயிக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும், அது இடம்பெறவில்லை.

இதனையடுத்து, முட்டைக்கான ஆகக்குறைந்த சில்லறை விலையை நிர்ணயித்து நுகர்வோர் அதிகார சபை வெளியிட்டிருந்த வர்த்தமானியை ரத்து செய்து கடந்த புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவொன்றை பிறப்பித்தது.

இதன் காரணமாக, சந்தைகளில் ஏனைய பொருட்கள் தொடர்பில் சோதனைகளை மேற்கொண்டாலும் அதிகூடிய விலைக்கு முட்டையை விற்பனை செய்யும் மற்றும் விதி யோகிக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே சில வர்த்தகர்கள் வெவ்வேறு விலைகளில் முட்டையை விற்பனை செய்வதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மத்திய வங்கியின் திருத்திய சட்டமூலத்திற்கு அங்கீகாரம்

கொழும்பு, டிசெ. 21

மத்திய வங்கி சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள மத்திய வங்கி சட்டமூலம் 2019.11.01 அன்று அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அது உட்சேர்க்கப்படவில்லை.

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாகவும் பயன் வாய்ந்ததாகவும் மேற்கொள்வற்கு இயலுமாகும் வகையில் ஆரம்ப சட்டமூலத்திற்கு புதிய திருத்தங்களை உட்சேர்த்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# கொழும்பு துறைமுக நகருக்கு புதிய விசா வசதிகள் அறிமுகம்

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு துறைமுக நகரத்திற்கு புதிய வீசா வகைகளை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் நிறுவுவதற்குள்ள சர்வதேச வணிகம், கப்பற்றுறை நடவடிக்கைகள், நிதி, தகவல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு சேவைகளுக்காக வருகை தரவுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் ஏனைய குறித்த தரப்பினர்களுக்கு விசா வழங்கல் மற்றும் அதற்குரிய பணிகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது.

இதற்கமைய, கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய விசா வகைகளை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# 10 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது!

கொழும்பு, டிசெ. 21

10 பொருட்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதன்படி, சுற்றுலாத் துறைக்கான ஆற்றல் பானங்கள், தளபாடங்கள் உற்பத்திக்குத் தேவையான எம்.டி.எவ் பலகைகள், சி.சி.ரி.வி. அலகுகள் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கான உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டு அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இலங்கை கையாண்டு வரும் அந்நிய செலாவணி நெருக்கடியை கருத்தில் கொண்டு இறக்குமதியை கட்டுப்படுத்தும் வகையில் பல சந்தர்ப்பங்களில் வர்த்தமானி வெளியிடப்பட்டது. (அ)



# 104 ரோஹிங்கியா அகதிகள் மீட்பு; மனித குலத்துக்கு முன்னுதாரணம்!

## வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பு பாராட்டு

கொழும்பு, டிசெ. 21

கடந்த 17ஆம் திகதி வடமராட்சி கிழக்கு கடற்கரையில் தத்தளித்த ரோஹிங்கியா அகதிகள் படகு துரிதமாக மீட்கப்பட்டதை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் பாராட்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மற்றும் இலங்கை கடற்படையின் விரைவான நடவடிக்கையை அந்த அமைப்புக்கள் பாராட்டியுள்ளன.

17ஆம் திகதி மாலை சுமார் 104 ரோஹிங்கியா அகதிகள் இலங்கையின் வடபகுதியில்- வடமராட்சி கிழக்கு கடலில் தத்தளிப்பதை உள்ளூர் மீனவர்கள் கண்டனர். உடனடியாக அவர்கள் கடற்படையினர், கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் என்பனவற்றுக்கு தகவல் வழங்கினர்.

அத்துடன், உள்ளூர் மீனவர்களும் அங்கு மீட்பு நடவடிக்கைக்குச் சென்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு, காங்கேசன்துறை கடற்படைத் தளத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் இந்திரிகா ரத்வத்த கூறுகையில், "இலங்கை கடற்படை மற்றும் உயிர்களை காப்பாற்ற செயல்பட்ட உள்ளூர் மீனவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நாங்கள் நன்றி கூறுகிறோம். கடலில் ஏற்படும் துயரமான உயிரிழப்பைத் தடுக்க உடனடியாகவும் விரைவாகவும் செயல்பட பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டிய மனிதகுலத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக இலங்கை அதிகாரிகளும் அகதிகளின் உடனடித் தேவைகளுக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், சட்டக் கடமைகள் மற்றும் மனிதாபிமான மரபுகளுக்கு இணங்க, படகுகளில் தத்தளித்து, துன்பத்தில் இருப்பவர்களைக் காப்பாற்றுமாறு அனைத்துப் பொறுப்புள்ள நாடுகளுக்கும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறது.

அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அருகே வங்காள விரிகுடாவில் மற்றொரு படகு பேரழிவில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

2022 ஆம் ஆண்டில் சுமார் 161 அகதிகள் கடலில் இறந்துள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர். (அ)

# இலங்கை சீனி நிறுவனத்துக்கு புதிய தலைவராக சமரக்கோன்

கொழும்பு, டிசெ. 21

இலங்கை சீனி நிறுவனத்தின் புதிய தலைவராக மேஜர் ஜெனரல் சாரத சமரக்கோன் நேற்று தனது கடமைகளை ஆரம்பித்தார்.

இலங்கை இராணுவத்தின் கஜபா படைப்பிரிவில் புகழ் பெற்ற சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றிய அவர், ஓய்வு பெற்ற பின்னர் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றினார்.

நட்டத்தில் இருந்த ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையை குறுகிய காலத்தில் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்காக பெரும் சேவை செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பௌத்த மற்றும் பாலி பல்கலையை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 21

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் வரை பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இணக்கப்பாட்டை எட்டுவதற்கு சகல மகாநாயக்க தேரர்களுடனும் கலந்துரையாட வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# தாமரை கோபுரத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வு



கொழும்பு, டிசெ. 21

இலங்கை சுற்றுலா அமைச்சு, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் இணைந்து "கிறிஸ்மஸ் கொழும்பு - தாமரை கோபுரம்" என்ற நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இந்த நிகழ்வு நடைபெறும்.

ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் உணவுச் சந்தை, குளிர்பானக் கடைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள், இசைக்குழுக்களின் இசை நிகழ்ச்சிகள் மற்றும் குழந்தைகளுக்கான அரங்கம் ஆகிய அம்சங்களைக் இந்த நிகழ்வு கொண்டிருக்கும். (அ)

# 10,000 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்க அரசு முடிவு

கொழும்பு, டிசெ. 21

9,417 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அடுத்த தரத்துக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்த யோசனைக்கு நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

பதவி உயர்வு பெறும் பொலிஸ் அதிகாரிகளில் 8,312 ஆண் மற்றும் 1,005 பெண் காவலர்கள், கான்ஸ்டபிள் முதல் பொலிஸ் கண்காணிப்பாளர் வரையிலான அந்தஸ்தில் உள்ளவர்கள் புதிய உத்தரவின் கீழ் மேலே உள்ள பதவிக்கு உயர்த்தப்படுவார்கள். (அ)

# மின் கட்டண மாற்ற யோசனை அமைச்சரவைக்கு வரவில்லை!

கொழும்பு, டிசெ. 21

மின் கட்டணத்தை திருத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமோ அல்லது பிரேரணையோ நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தன, நேற்று முன்தினம் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது மின்சாரக் கட்டணங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பொறிமுறையொன்று அமைச்சரவைக்கு முன்மொழியப்படும் என கடந்த வாரம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான யோசனையொன்றை அமைச்சர் முன்வைக்கவில்லை.

இதேவேளை, ஓகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும், மின்சார சபையின் நட்டத்தை ஈடு கட்ட இது போதாது எனவும், எனவே கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாகவும் கடந்த மாதம் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் இரண்டு கட்டங்களின் கீழ் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டதாக மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார். (அ)

# நீதி கிட்டும் வரை ராஜபக்ஷக்கள் சாபத்திலிருந்து விடுபடமுடியாது!

## அடித்து கூறுகிறார் சந்தியா எக்னெலிகொட




கொழும்பு, டிசெ. 21

தனது கணவருக்கு நீதி கிடைக்கும் வரை ராஜபக்ஷக்கள் யாரும் சாபத்தில் இருந்து விடுபட முடியாது என காணா மல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

பிபிசி நிறுவனம் வெளியிட்ட 2022 ஆம் ஆண்டுக்கான 100 பெண்கள் பட்டியலில், சந்தியா எக்னெலிகொடவும் இடம்பெற்றுள்ளார். இது தொடர்பில் ஊடங்களிடம் பேசும்போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனவரி 25, 2022 அன்று எனது அன்புக் கணவர் மறைந்து 12 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டதற்கு காரணமான ராஜபக்ஷக்களுக்கு 'சுவாமிபக்தி அத்துர மஹா சபயா' என்ற சக்தி வாய்ந்த சாபத்தை ஏற்படுத்துவதற்காக நான் எனது தலையை மொட்டையடித்து கருப்பு அங்கிகளை அணிந்தேன்.

இது மிகவும் சக்திவாய்ந்த சாபமாகும், எனது கணவருக்கு ஒருநாள் நீதி கிடைக்கும் வரை அவர்களில் எவரும் அதிலிருந்து விடுபடமாட்டார்கள்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி எனது கணவர் கடத்தப்பட்ட போது அல்லது காணாமல்போன போது நான் முதன்முதலில் கமராவின் முன் வந்தேன். அதன் பின்னர் எனது கணவருக்கு நீதி தேடி பலவிதமான விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வந்தேன்.

எங்களிடம் இருந்து பிரகீத்தை பறித்து 4,712 நாட்கள் ஆகியும் என் தேடல் இன்னும் முடியவில்லை. இந்தப் பயணத்தின் போது பல நல்ல உள்ளம் கொண்டவர்கள் எனக்கு உதவியிருக்கிறார்கள். சிலர் நீதிமன்ற அறையிலிருந்து காவல் நிலையம் வரை தாமதித்து ஆட்சேபித்தனர்.

ஜனவரி 25, 2010 அன்று நான் பொலிஸ் நிலையத்தில் இருந்தபோது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னை அழைத்து, பிரகீத்தை கண்டுபிடிக்க உதவுவேன், கவலைப்பட வேண்டாம் என்றார். இன்று அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகிவிட்டார்.

நான் அவரிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், சாட்சிகளிடம் இருந்து அரசியல் அழுத்தத்தை நீக்கி பிரகீத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும், அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி கிடைக்க உதவ வேண்டும்-என்றார். (அ)

# மிருசுவில் படுகொலையின் 22ஆம் ஆண்டு நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், டிசெ. 21

2000 ஆம் ஆண்டு மிருசுவில் பகுதியில் வைத்து இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட எட்டுப் பேரின் 22 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப் பட்டது.

சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் கிஷோரின் ஏற்பாட்டில் மிருசுவில் தேவாலயத்திற்கு முன்னால் காலை 10.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் படுகொலை செய்யப் பட்டவர்களின் உறவினர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மிருசுவிலில் இருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளையும், உடைமைகளையும் பார்ப்பதற்காகவும் அங்குள்ள காட்டில் விறகு வெட்டி வரவும் உள்ளூர் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி பெற்று டிசெம்பர் 19 ஆம் நாள் மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலத்தை அங்கு கண்டிருந்தனர். அவர்களுள் சிலர் தமது குடும்பத்தவர்களுடன் இத் தகவலை பகிர்ந்து கொண்டுமிருந்தனர்.

அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளங் காண முற்பட்டவேளை அங்கு நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவர்களுள் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள பொதுமகனொருவரது வீட்டு மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் பலத்த காயங்களுடன் இத்தாக்குதல்களில் இருந்து தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விவரங்கள் தெரிய வந்தன.

அவர் வழங்கிய தகவலிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து பின்னர் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன.

கொல்லப்பட்டவர்களில் பதின்ம வயதுச் சிறுவர்கள் மூவரும் ஐந்து வயதுச் சிறுவன் வில்வராசா பிரசாத் ஆகியோரும் அடங்குவர். (அ)

# ஒரே நேரத்தில் பட்டம் பெற்ற சகோதரிகள்!

## அவுஸ்திரேலியாவில் இலங்கை யுவதிகள் அசத்தல்



மெல்பேர்ன், டிசெ. 21

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தின் 168 வருட வரலாற்றில் முதன்முறையாக இரண்டு இரட்டைச் சகோதரிகள் ஒரே நேரத்தில் கலா நிதிப் பட்டம் பெற்றுள்ளனர்.

இந்த இரண்டு சகோதரிகளும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். நதீஷா குணரத்ன மற்றும் தேஜானி குணரத்ன ஆகியோரே பட்டம் பெற்றுள்ளனர்.

இந்த இரண்டு இலங்கை இரட்டை சகோதரிகளும் உலக இரட்டையர் தினத்துக்கு ஒரு நாள் முன்னதாக கடந்த 17ஆம் திகதி கலாநிதிப் பட்டங்களைப் பெற்றனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பயின்ற பின்னர் 2016 ஆம் ஆண்டு மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப்படிப்பை ஆரம்பித்தனர். (அ)

# 2014 முதல் இலங்கையிலிருந்து 2,835 இந்திய மீனவர் விடுதலை

## வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்



புதுடில்லி, டிசெ. 21

2014ஆம் ஆண்டு முதல் இதுவரை 2,835 இந்திய மீனவர்கள் இலங்கையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் திங்கள்கிழமை தெரிவித்தார்.

பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரின்போது மக்களவையில் பேசிய ஜெய்சங்கர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின் விடுதலைக்காக பிரதமர் நரேந்திர மோடியை பாராட்டிய ஜெய்சங்கர்,

தமிழக மீனவர்களின் பிரச்னைகள் குறித்து பிரதமர் மோடி கவனம் செலுத்தியுள்ளார். இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பிரதமர் பலமுறை பேசியிருக்கிறார்.

மேலும், இலங்கையில் கைதான மீனவர்கள் விடுவிக்கப்பட்டால், அது சென்னையில் யாரோ கடிதம் எழுதுவதால் அல்ல, டில்லியில் உள்ள ஒருவர் இந்த விவகாரத்தை எடுத்துச் செல்வதால் தான்-என்றார். (அ)

# சொல்ஹெய்ம் மத்தியஸ்தரா?



கொழும்பு, டிசெ. 21

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் சர்வகட்சி கலந்துரையாடலுக்கான மறைமுக மத்தியஸ்தராக எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசால் நியமிக்கப் பட்டுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது நோர்வே சார்பில் சமாதானத் தூதுவராகப் பணியாற்றியிருந்தவர் எரிக் சொல்ஹெய்ம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் காலநிலை தொடர்பான தூதுவராக அவர் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

கடந்த 13ஆம் திகதி இனப்பிரச்னைக்கான தீர்வை நோக்கிய சர்வகட்சி கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார் சொல்ஹெய்ம். அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் 16 ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனையும் அவர் சந்தித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று முன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

சர்வகட்சி கலந்துரையாடலுக்கான பின்னணி ஏற்பாடுகளைத் தொடர்வது பற்றியே இந்தப் பேச்சுக்களின் போது அதிகளவு அக்கறையை எரிக் சொல்ஹெய்ம் வெளிப்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. மறைமுகமான மத்தியஸ்த ராகவே அவரது இந்தச் சந்திப்புக்கள் அமைந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இந்தியாவில் அதிகரிக்கும் கொடூர கொலை சம்பவங்கள்

## குற்றவாளிகளை ஈர்க்கும் திரைப்பட கதாபாத்திரங்கள்!

- சௌதிக் பிஸ்வாஸ்

30 ஆண்டுகளுக்கு முன் இந்திய தலைநகர் டில்லியில் விஞ்ஞானி ஒருவர் தன் மனைவியுடனான வாக்குவாதத்தில் அவரை கொன்று, உடலை பல துண்டுகளாக்கி பெட்டி ஒன்றில் அடைத்தார்.

அதன்பின், அவர் அந்த பெட்டியுடன் ரயிலில் பயணிகள் நெரிசலுடன் 1,500 கி.மீக்கும் அதிகமாக பயணித்து தெற்கு நகரமான ஐதராபாத்திற்கு சென்று, அங்கு சதுப்பு நிலம் அருகே அமைந்திருந்த ஹோட்டலில் தங்கினார்.

அடுத்த சில தினங்களில், மனைவியின் உடல் பாகங்களை அந்த சேறு நிறைந்த ஏரியில் அப்புறப்படுத்தினார். ஒருநாள், உணவுக்காக அந்த பகுதியில் அலைந்துகொண்டிருந்த நாய் ஒன்று, சதுப்பு நிலத்திலிருந்து 'மனித கை' ஒன்றை வெளியில் எடுத்தது.

"கொலை செய்ததற்கான ஆதாரங்களை அழிப்பதற்காக அவர் சடலத்தை பல துண்டுகளாக சிதைத்து அவற்றை வேறு நகரத்திற்கு எடுத்துச் சென்று அப்புறப்படுத்தியுள்ளார். இப்படி கொலை செய்து பின்னர் உடல் உறுப்புகளை துண்டுகளாக்கி அப்புறப்படுத்துவது புதிதல்ல.

ஆனால், இப்படி உடல் பாகங்களை பல துண்டுகளாக்கி அப்புறப்படுத்தும் முறை புத்தகம் அல்லது திரைப்படங்களால் ஈர்க்கப்பட்டதால் நிகழ்கிறதா என நாங்கள் ஆச்சர்யப்பட்டோம்," என டில்லி காவல்துறையை சேர்ந்த மூத்த அதிகாரி தீபேந்திர பதக் நினைவு கூர்கிறார்.

சமீப மாதங்களாக இந்தியாவில் இத்தகைய ஒரே மாதிரியான கொலைகள் பல தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்துள்ளன.

ஒவ்வொரு வழக்கிலும், கொலை செய்யப்பட்ட நபரின் உடல் பாகங்கள் பல துண்டுகளாக்கப்பட்டு அவை குளிர்சாதனப் பெட்டியிலோ அல்லது சூட்கேஸிலோ அடைக்கப்படுகின்றன. அதன்பின், அந்த உடல் பாகங்கள், காலியான பரந்த நிலத்திலோ அல்லது வெறிச்சோடிய சாலையிலோ அல்லது காட்டுப் பகுதியிலோ அப்புறப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள குற்றத்தரவுகள் இத்தகைய கொலைகள் குறித்த எந்த தடயங்களையும் வழங்கவில்லை. இந்தியாவில் 2021ம் ஆண்டில் 29,000 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது 2020ம் ஆண்டைவிட 0.3 வீதம் அதிகம். இவற்றில் பல கொலைகள் "தகராறு", "தனிப்பட்ட பழிவாங்கல்" அல்லது " (பண) ஆதாயத்திற்காக" நிகழ்த்தப்பட்டவையாகும்.

இவற்றில் கொலை செய்யப்பட்ட எத்தனை பேரின் உடல் பாகங்கள் துண்டுகளாக்கப்பட்டன அல்லது கொலை செய்வதற்கு என்ன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து நமக்குத் தெரியவில்லை.

### நகலெடுக்கப்படுகிறதா கொலைகள்?

"ஒரு கொலையை பிரதியெடுத்தாற் போன்று மற்றொரு கொலையை செய்வது நிகழ்கிறது. கொலைகளை பிரதியெடுக்கும் நடத்தையை ஊடகங்கள் பரப்புகின்றன," என குற்றங்களை ஊடகங்கள் வெளியிடும் முறை குறித்து ஆய்வு செய்த வரும் கலாசார நடத்தை குறித்த ஆய்வாளருமான லோரென் கோல்மேன் எழுதுகிறார்.

கடந்த நவம்பர் மாதத்தில் தன் பார்ட்னர் ஷ்ரத்தா வால்கரை கொன்றதாக குற்றம்சாட்டப்பட்ட அப்தாப் பூனாவாலா, டெக்ஸ்டர் எனும் அமெரிக்க தொடரால் ஈர்க்கப்பட்டதாக தெரிகிறது. இந்த தொடரில், தடயவியல் நிபுணர் ஒருவர் சீரியல் கொலையாளியாகவும் இருப்பார்.

பூனாவாலா ஷ்ரத்தாவின் கழுத்தை நெரித்துக் கொலை செய்து அவரது உடலை 36 துண்டுகளாக்கி அதனை குளிர் சாதன பெட்டியில் வைத்து பின்னர் அவற்றை வீட்டுக்கு அருகே உள்ள காட்டுப்பகுதியில் கொட்டியுள்ளார் என காவல் துறையினர் கூறுகின்றனர்.

"அத்தகைய கொலைகளை பரபரப்பாக்குவது மக்களை மிகை உணர்ச்சி கொண்டவர்களாக்கும், அதேபோன்று கொலைகளை நகலெடுப்பதற்கும் ஊக்கமளிக்கும்," என்கிறார் குற்றவியல் உளவியலாளர் அனுஜா கபூர்.

ஆயினும்கூட, பரபரப்புகளை விரும்பும் ஊடகங்கள் விவரிப்பது போன்று இந்தியாவின் 'ப்ரிட்ஜ்' மற்றும் 'சூட்கேஸ்' கொலைகளை 'நகல் குற்றங்கள்' என நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை என குற்றங்களை விசாரிப்பவர்களும் குற்றவியல் உளவியலாளர்களும் கூறுகிறார்கள்.

"ஒரு குற்றத்தைப் போன்றே வேறொரு நகல் குற்றங்கள் நடக்கின்றன. ஆனால், என்னுடைய அனுபவத்திலிருந்து ஆதாரங்களை அழிப்பதற்கு கொலையாளிகள் தேர்ந்தெடுக்கும் முறைகள் திரைப்படங்களிலிருந்தோ அல்லது நாவல்களிலிருந்தோதான் அதிகம் எடுக்கப்படுகின்றன. மாறாக அதேபோன்ற குற்றங்களிலிருந்து நகலெடுக்கப்படுவதில்லை," என்கிறார் பதக்.

கொலை செய்தபின் உடலின் பாகங்களை துண்டுகளாக்கி அழிப்பது பழமையானது மற்றும் வழக்கமான ஒன்றே. கெட்ட செய்திகள் மீதான ஊடகங்களின் சார்பு நிலை மற்றும் பரபரப்பான கொலைகளுக்கு மிகையான கவனத்தையும் நேரத்தையும் அளிப்பது, இதே போன்ற குற்றங்கள், கொலைகள் அடிக்கடி நடக்கின்றன என்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

"சடலத்தை துண்டுகளாக்கி ஆதாரங்களை அழிப்பது ஒப்பீட்டளவில் அரிதானது, ஆனால் எல்லா சமயங்களிலும் நடந்துகொண்டு தான் இருக்கின்றது. ஆனால், அவற்றில் பல வழக்குகள் ஊடகங்களால் வருவதில்லை. ஊடகங்களில் வராத இதேபோன்ற மூன்று கொலைகள் குறித்து நான் ஆய்வு செய்து வருகிறேன்," என டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் தடயவியல் மருத்துவத்துறையின் தலைவர் சுதிர் கே. குப்தா கூறுகிறார்.



மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இந்தியாவில் தடயவியல் அறுவை சிகிச்சை நிபுணராக டாக்டர் குப்தா தனது வாழ்க்கையைத் தொடங்கியபோது, பாதிக்கப்பட்டவர்களை அவர்களது வீடுகளை விட்டு வெளியே வரவழைத்து, வெறிச்சோடிய பகுதிகளில் கொலை செய்து, அவர்களின் சடலங்கள் காட்டில் வீசப்பட்ட நிகழ்வுகளை கண்டுள்ளார்.

நகரமயமாக்கல் பெருகிவரும் நாட்டில் பல குடும்பங்கள் தனி குடும்பங்களாகிவிட்டன. இதனால் பல கொலைகள் ஆட்கள் அதிகம் இல்லாத வீடுகளில் நடக்கின்றன. சில நிகழ்வுகளில் கொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் துண்டுகளாக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.

> "ஒவ்வொரு வழக்கிலும், கொலை செய்யப்பட்ட நபரின் உடல் பாகங்கள் பல துண்டுகளாக்கப்பட்டு அவை குளிர்சாதனப் பெட்டியிலோ அல்லது சூட்கேஸிலோ அடைக்கப் படுகின்றன. அதன் பின், அந்த உடல் பாகங்கள், காலியான பரந்த நிலத்திலோ அல்லது வெறிச்சோடிய சாலையிலோ அல்லது காட்டுப் பகுதியிலோ அப்புறப்படுத்தப்படுகின்றன."

"இத்தகைய கொலைகளில் சடலங்களின் உடல்பாகங்கள் துண்டுகளாக்கப்படும் போது, தடயவியல் மறுசீரமைப்பு மற்றும் பாதிக்கப்பட்டவரை அடையாளம் காண்பது ஒரு சவாலாக மாறும்," என்கிறார் டாக்டர் குப்தா.

'ஆனால் மனித எலும்புகளை விரிவாக ஆய்வு செய்வது பாலினம், வயது, இறந்த திகதி மற்றும் இறப்புக்கான சாத்தியமான நிகழ்வு ஆகியவற்றைக் கூறலாம்," என்கிறார் அவர்.

இத்தகைய கொலைகள் குறித்த சில தடயங்களை சர்வதேச ஆய்வுகள் வழங்குகின்றன.

பின்லாந்தில் 10 ஆண்டுகள் நீடித்த வழக்குகளின் மாதிரியிலிருந்து 13 வழக்குகளை ஆய்வு செய்ததில், பாதிக்கப்பட்டவர்களில் யாரும் குற்றவாளிகளுக்கு அந்நியர்கள் இல்லை என்றும், கிட்டத்தட்ட பாதி பேர் கொலை செய்யப்பட்டவர்களின் இணையர் அல்லது குடும்ப உறுப்பினர்கள் என்றும் கண்டறியப்பட்டது. கொலை செய்யப்பட்ட நேரத்தில், பெரும்பாலான குற்றவாளிகள் வேலையில்லாமல் இருந்தனர், மேலும் யாரும் மனித உடல்கள் அல்லது சடலங்களைக் கையாள்வது பற்றிய அறிவு தேவைப்படும் எந்தத் தொழிலிலும் இல்லை.

போலந்தின் கிராகோவில் உள்ள தடயவியல் மருத்துவத் துறையின் அரை நூற்றாண்டுக்கும் மேலாக, துண்டிக்கப்பட்ட உடல்கள் தொடர்பான 30 கொலை வழக்குகள் பற்றிய மற்றொரு ஆய்வில், இந்தக் கொலைகள் பொதுவாக திட்டமிடப்பட்டவை அல்ல என்றும், 'பாதிக்கப்பட்ட (குடும்பம் அல்லது நண்பர்) உடன் நெருங்கிய உறவில் இருந்த குற்றவாளிகளால் செய்யப்பட்டவை" என்றும் கண்டறியப்பட்டது.

கொலை நடந்த அதே இடத்தில் குற்றவாளியின் வீடும் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. போஸ்டன் யுனிவர்சிட்டி ஸ்கூல் ஆஃப் மெடிசின் மேற்கொண்ட ஆய்வில், உடல் பாகங்கள் துண்டிக்கப்பட்ட 76 வீத குற்றங்கள் ஆண்களால் செய்யப்படுகின்றன என தெரியவந்துள்ளது.

இந்தியாவில் இத்தகைய கொலைகளின் முறைகள் பற்றி மிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. எத்தனை பேர் கொலை செய்த பின் தானாகவே காவல் துறையிடம் சரணடைகின்றனர் என்பதும் எத்தனை பேர் சடலத்தை சிதைத்து ஆதாரங்களை மறைக்க முயல்கிறார்கள் என்பதும் தெரியவில்லை.

"ஆனால், இந்தக் கொலைகள் பல இந்தியாவில் பிரச்னைக்குரிய திருமணங்கள், திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுகள், திருமணம் செய்யாமல் ஒன்றாக வாழ்வது உள்ளிட்ட நவீன கால சமூக உறவுகளில் உள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன" என்கிறார் பதக்.

'சில சமயங்களில் கட்டுப்பாடுகளை இழக்கும்போது இத்தகைய கொலைகள் நடக்கின்றன" என்கிறார் அவர்.

(பிபிசி)



# சமூகத்தின் சகல தரப்புகளையும் அரசின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் அரவணைப்பதே உண்மையான நல்லிணக்கம்



—— கலாநிதி ஜெகான் பெரேரா

மனித உரிமைகளில் அக்கறை கொண்ட பல அமைப்புகள் கடந்த வாரத்தை பல நிகழ்வுகளை நடத்துவதற்கு அர்ப்பணித்தன. குறிப்பாக, போராட்ட இயக்கம் ஒடுக்கப்பட்ட பிறகு மனித உரிமைகள் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறிவிட்டது.தேசிய பாதுகாப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் முன்னுரிமை கொடுப்பவர்களுக்கும் நீதிக்கு முன்னுரிமை கொடுப்பவர்களுக்கும் இடையே பதற்றம் நிலவிவருகிறது.பொருளாதாரம் சீர்குலைந்து போன பின்புலத்தில் நீதி தொடர்பான பிரச்சினை முன்னரங்கத்துக்கு வந்திருக்கிறது.

பொருளாதார சீர்குலைவு சில பிரிவினரை பெருமளவுக்கு பாதிக்காமல் இருக்கக்கூடும் என்ற போதிலும் சனத்தொகையின் மிகப்பெரிய பெரும்பான்மையை பாரதூரமாகப் பாதிக்கின்றது. பொருளாதாரம் மேலும் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் நிலையில், அந்த அவலத்துக்கு பெருமளவுக்கு பொறுப்பானவர்கள் இன்னமும் அதிகாரத்தில் இருப்பது மாத்திரமல்ல, தங்களது செயற்பாடுகள் கடந்தகாலத்திலும் சமகாலத்திலும் மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புக்களை அலட்சியம் செய்து தங்களது ஆட்களை மேலும் அதிகாரப்பதவிகளுக்கு கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த செப்டெம்பர் மாதத்துடன் முடிவடைந்த கடைசி காலாண்டில் பொருளாதாரம் 11.8 சதவீதத்தினால் சுருங்கிவிட்டது என்ற பொருளாதாரத் தகவல் வரவிருக்கும் ஆபத்தின் முன்னறிகுறியாகும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதுடன் முடிவடைந்த இரண்டாவது காலாண்டின் இடர்மிக்க ஆனால் அதே வேளை புரட்சிகரமான நிகழ்வுகள் அவற்றுக்கு பின்னர் இடம்பெற்ற அரச அடக்குமுறையினால் மறுதலையாக்கப் படவில்லை என்பதை இது காட்டுகிறது.

போராட்ட இயக்கம் மீதான அரசியல் அடக்குமுறை பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய முதலீடுகளை கவரும் வகையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பது வெளிப்படையானது. மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கடந்தவாரம் நான் பங்கேற்ற மூன்று நிகழ்வுகளில் இது பிரதிபலித்தது. இரு நிகழ்வுகள் உயிர்வாழ்வுக்கான கூட்டமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் என்று சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மூன்றாவது நிகழ்வை அரச நிறுவனமான தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

குறிப்பாக, மூன்றாவது நிகழ்வு இலங்கைச் சமூகத்தின் பல்வகைமையையும் பன்முகத்தன்மையையும் பிரதிபலிக்கக்கூடிய முறையில் அமைந்த காரணத்தினால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மெச்சக்கூடியதாகவும் அமைந்தது. இவ்வாறு அமைவது மிக அரிதாகும். மனித உரிமைகள் ஆணைக்குழு பல்வேறு காரணங்களுக்காக அண்மைக்கால நிகழ்வுப்போக்குகளில் கணிசமானளவுக்கு கவனத்தைச் செலுத்தியது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் (பதவியில் இருக்கும் ஜனாதிபதி தான் விரும்பிய எவரையும் நியமிப்பதற்கான தற்துணிபு அதிகாரத்தை அவருக்கு வழங்குகின்ற) அரசியலமைப்புக்கான 20 திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்டவர்கள். அந்த திருத்தம் ஜனாதிபதியின் கைகளில் மட்டுமீறிய அதிகாரங்களைக் குவிக்கும் நோக்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆரம்ப காலப்பகுதியில் கொண்டுவரப்பட்டது.

**ஆணைக்குழு தரங்குறைப்பு**

20 அரசியலமைப்பு திருத்தமும் சுயாதீனமான நிறுவனங்களை பலவீனப்படுத்திய செயல்களும் மனித உரிமைகள் விவகாரங்கள் மீது கவனத்தைச் செலுத்துகின்ற சிவில் சமூக அமைப்புகளினதும் சர்வதேச சமூகத்தினதும் கடுமையான கண்டனத்துக்குள்ளாகின. இதன் துரதிர்ஷ்டவசமான விளைவாக சர்வதேச தரமதிப்பீட்டு நிறுவனத்தினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 'ஏ" அந்தஸ்தில் இருந்து 'பி" அந்தஸ்துக்கு தரமிறக்கப்பட்டது.

இதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புகளும் அபிப்பிராயங்களும் கூடுதலான அளவுக்கு எச்சரிக்கையுடன் நோக்கப்பட்டதுடன் கனதி குறைந்தவையாகவும் கருதப்பட்டன. இது உலகில் நல்லாட்சியை மேம்படுத்துவதற்கான ஆணையைக் கொண்ட சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கக்கூடிய பொருளாதார மற்றும் நிறுவன ரீதியான ஆதரவின் மட்டத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு தரங்குறைப்பு சர்வதேச கூட்டுப்பங்காண்மையின் ஊடாக பெறப்பட்டிருக்கக் கூடிய டொலர்கள் வருகையை குறைத்ததன் மூலம் தேசிய பொருளாதாரத்தை மறைமுகமாக பாதித்திருக்கிறது. அது நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து சர்வதேசத்தின் மத்தியில் தாழ்ந்த எண்ணம் உருவாகுவதற்கும் வழிவகுத்தது.

இதன் விளைவுகளில் ஒன்று பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது உட்பட பெருமளவு மனித உரிமைகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் வரை இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வாபஸ் பெறக்கூடிய சாத்தியம் குறித்து இலங்கையை எச்சரிக்கை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளக்கூடிய தீர்மானமாகும். 20வது திருத்தத்தின் விளைவாக இலங்கையின் நீதிப் பொறிமுறையின் நம்பகத்தன்மை பலவீனப்படுத்தப்பட்டமை கடந்த அக்டோபரில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இறுதி கூட்டத்தொடரில் நாட்டுக்கு எதிராக கடுமையான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கும் பங்களிப்புச் செய்தது.

அரசாங்கம் கொண்டுவந்த 21 வது அரசிலமைப்பு திருத்தம் பொதுவில் வரவேற்கப்பட்டது என்றாலும் அதன் மூலமாக 20 வது திருத்தத்தை ரத்துச் செய்யும் பணி முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. உதாரணமாக, பாராளுமன்றத்தின் ஐந்து வருட பதவிக்காலத்தில் இரண்டரை வருடங்கள் நிறைவடைந்த நிலையில் தனது தற்துணிபின் அடிப்படையில் அதை கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதி இன்னமும் கொண்டிருக்கும் அதேவேளை தனது கட்டுப்பாட்டில் பல அமைச்சுக்களை அவரால் வைத்திருக்கவும் முடியும்.

தான் விரும்புகின்ற எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் அமைச்சராக நியமிக்கக்கூடிய தற்துணிபு அதிகாரத்தையும் ஜனாதிபதி கொண்டிருக்கிறார். ஆனால், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் விவகாரத்தைப் பொறுத்தவரை, தன்னெண்ணப்படி செயற்படுவதற்கு ஜனாதிபதிக்கு 20 வது திருத்தத்தின் கீழ் இருந்த அதிகாரம் புதிய திருத்தத்தின் மூலம் பறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்க நபர்கள் நியமிக்கப்படக்கூடிய பெருமளவு சாத்தியத்துக்கு வழிபிறக்கும்.

**ஆணைக்குழுக்களை மீள அமைத்தல்**

மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை மீள நியமிப்பதற்கான ஏற்பாடுகளையும் 21வது திருத்தம் கொண்டிருக்கிறது. தற்போதைய தருணத்தில் அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்கிப்போகாத சுயாதீனமான நிலைப்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் எடுத்திருப்பதால் அவற்றுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச விசனம் தெரிவித்திருக்கிறார். சர்ச்சைக்குரிய பல விவகாரங்களில் இவ்விரு ஆணைக்குழுக்களும் எடுத்திருக்கும் நிலைப்பாடுகளை சிவில் சமூகத்தைச் சேர்ந்த பலரும் பாராட்டியிருக்கும் நிலையில் அதன் உறுப்பினர்களை அரசாங்கம் மாற்றினால் அது துரதிர்ஷ்டவசமானது.

> அடுத்த சுதந்திர தினம் அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளிக்கும்போது கண்ணுக்குப் புலப்படக்கூடிய – அங்கீகரிக்கப்பட்ட சிறுபான்மையினரையே அவர் மனதில் கொண்டிருக்கிறார். கண்ணுக்கு புலப்படாத – அங்கீகரிக்கப்படாத சிறுபான்மையினரையும் பாதுகாத்து பராமரிக்கும் போதுதான் இலங்கை அரசு மீதான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

அரசாங்கத்தின் அதிருப்தியை சம்பாதிக்கவேண்டிய ஆபத்து இருக்கின்ற போதிலும் கூட, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் இலட்சியங்களுக்காக குரல் கொடுக்கின்ற ஒரு அரச நிறுவனத்துக்கு ஒருமைப்பாட்டை காண்பிக்க வேண்டும் என்ற எனது விருப்பமே மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் பங்கேற்கவேண்டும் என்று என்னை தூண்டியது. அந்த நிகழ்வு நாட்டைப் பாதிக்கின்ற மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் ஆழமானதும் அழுத்தமானதுமான அணுகுமுறையொன்றை கடைப்பிடித்ததால் எடுத்துக்காட்டாக அமைந்தது. அடிப்படை மனித உரிமைகள் உடன்படிக்கைகளில் உள்ளடங்கியிருக்கும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் உரிமைகள் மீதே தற்போது கவனம் குவிந்திருக்கிறது.

ஒன்றுகூடுவதற்கான உரிமையும் சுதந்திரமாக கருத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமையும் இயங்குநிலை ஜனநாயகம் ஒன்றுக்கு அடிப்படையாகும். போராட்ட இயக்கம் ஒடுக்கப்பட்டிருப்பதன் விளைவாக இந்த உரிமைகள் அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டும் குறுக்கப்பட்டும் இருக்கும் சூழ்நிலையை காணக்கூடியதாக இருக்கிறது.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க வழிசெய்யக்கூடிய அரசியல் உறுதிப்பாடே தற்போதைய தருணத்தின் தேவை என்பது அரசாங்கமும் வர்த்தக சம்மேளனங்களும் கற்பிக்கின்ற நியாயமாக இருக்கிறது. இந்த வாதம் சகல தரப்பினரையும் அரவணைத்து செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை அலட்சியம் செய்கிறது. அவ்வாறு செய்ததனாலேயே இன்றைய கவலைக்குரிய நிலை நாட்டுக்கு ஏற்பட்டது. கடந்த காலாண்டில் மட்டமான பொருளாதார செயற்பாடுகள் சகல தரப்பினரையும் அரவணைத்துச் செல்லவேண்டிய அணுகுமுறையை அரசாங்கத்தின் கொள்கைக்குள் உள்ளடக்கவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது. மக்களின் உரிமைகளை கட்டுப்படுத்துவதன் மூலமாக அரசாங்கமும் வர்த்தக சமூகமும் அடைய நினைக்கின்ற போலி உறுதிப்பாடு நாட்டுக்கு எந்தவிதமான அனுகூலத்தையும் கொண்டுவராது.

**அகல் விரிவான நல்லிணக்கம்**

தேசிய நல்லிணக்கச் செயன்முறையை துரிதப்படுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதிபூண்டிருக்கிறார். நாட்டின் இன, மத சிறுபான்மைச் சமூகங்களை அரவணைக்கத் தவறியமையே பல தசாப்த கால பாரபட்சத்துக்கும் அன்னியப்படுத்தலுக்கும் இறுதியில் பயங்கரவாதம் மற்றும் போருக்கும் வழிவகுத்தது. ஆனால் சகல தரப்பினரையும் உள்வாங்கி அரவணைக்கும் உண்மையான செயற்பாடுகள் இன, மத பல்வகைமை எல்லைகளுக்கு அப்பால் செல்லவேண்டியதாக இருக்கும்.

அது இன, மத பிளவுகளுக்கு அப்பால் விரிந்திருக்கும் இலங்கைச் சமூகத்தின் பல்வகைமை மற்றும் பன்முகத்தன்மையின் ஏனைய அம்சங்களையும் கருத்தில் எடுத்ததாக இருக்கவேண்டும். சனத்தொகையின் பெருமளவு பிரிவினரை தங்களது மனித உரிமைகளை அனுபவிப்பதில் இருந்தும் சமூக மற்றும் பொருளாதார வாழ்வுப் பொது நீரோட்டத்தில் பங்கேற்பதில் இருந்தும் விலக்கிவைக்கும் சாதி, மதம், பிரதேசம், பால்வேறுபாடு , உடல் ஊனம் மற்றும் தொழில்கள் தொடர்பிலான பிரச்சினைகளும் இருக்கின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழு வின் நிகழ்வு தேசிய சமூகத்தின் விளிம்புநிலை பிரிவுகளுக்கு அதன் பரந்தளவிலான சேவைகளின் அவசியத்தை உணர்த்தும் ஒன்றாக அமைந்தது. அந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. பாலியல் தொழிலாளர்கள், பால் சிறுபான்மையினர், சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்கள், அரசியலில் உள்ள பெண்கள், எயிட்ஸ் நோயாளிகள் மற்றும் சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்கள் உட்பட குறைந்தது இருபது பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் சார்பில் பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன. குள்ளமான கொண்ட தாயொருவர் தன்னைப் போன்றே உருவம் கொண்ட மகன் சமுதாயத்தினால் இரக்கமோ கண்ணியமோ இன்றி நடத்தப்படுவதைப் பற்றி கூறியதை கேட்ட போது மனம் நெகிழ்ந்தது. வங்கிக்கு அந்த மகன் சென்றால் அங்கு அவனை விடவும் உயரம் கூடிய கருமபீடத்தில் அலுவல்களைச் செய்வித்துக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தாய்கூறிக் கவலைப்பட்டார்.

தங்களால் குரலெழுப்பவும் போராடவும் முடியும், ஆனால் தங்களது கோரிக்கைகள் செவிமடுக்கப்படமாட்டாது என்பதே அங்கு பேசிய பலர் வெளிப்படுத்திய மனக்குறையாக இருந்தது. உறுதிமொழிகள் தரப்படுகின்றன, ஆனால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதில்லை என்றும் அவர்கள் முறையிட்டார்கள்.

சமுதாயத்தில் அவர்கள் எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கிறார்கள், எத்தகைய அந்தஸ்தில் இருக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் சகலரினதும் குரல்களை செவிமடுப்பதே பன்முகத்தன்மைக்கான ஒரு மதிப்பாகும். அடுத்த சுதந்திர தினம் அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளிக்கும்போது கண்ணுக்குப் புலப்படக்கூடிய - அங்கீகரிக்கப்பட்ட சிறுபான்மையினரையே அவர் மனதில் கொண்டிருக்கிறார். கண்ணுக்கு புலப்படாத - அங்கீகரிக்கப்படாத சிறுபான்மையினரையும் பாதுகாத்து பராமரிக்கும் போதுதான் இலங்கை அரசு மீதான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

# மாரடைப்பால் சாரதி உயிரிழப்பு மதிலை உடைத்து பாய்ந்தது பஸ்!

கொழும்பு, டிசெ. 21

பஸ்ஸை செலுத்திக் கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் சாரதி மரணமாகவே, பஸ் மதில் ஒன்றை உடைத்து வீடு ஒன்றுடன் மோதுண்டது.

கொழும்பு - பிலியந்தலை 342 பஸ் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இந்த பஸ், கொட்டாவை பஸ் நிலையத்துக்கு முதல் பயணத்தை ஆரம்பிப்பதற்காக நேற்று காலை 5.45 மணியளவில் சென்று கொண்டிருந்தது. அப்போது சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அப்போது, சாரதியால் பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடியாமல், வீதியை விட்டு விலகிய பஸ் அருகிலிருந்த மதிலை உடைத்துக் கொண்டு வீட்டின் வீட்டின் முன்பக்கத்தை மோதி நின்றுள்ளது

பஸ்ஸின் சாரதி, அவரின் ஆசனத்திலேயே உயிரிழந்து காணப்பட்டுள்ளார். கபில பெரேரா (வயது 54) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மத்தேகொடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வசந்த முதலிகேயின் விடுதலை குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேசுவதற்கு முடிவு!



கொழும்பு, டிசெ. 21

வசந்த முதலிகேயின் விடுதலை மற்றும் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை குறித்து எதிர்கட்சிகளுடன் பேச்சுகளை நடத்த அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெரென்ஸ் ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

நாங்கள் பல கட்சிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேச்சுகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் திட்டம் குறித்து தெளிவுபடுத்தவுள்ளோம்.

எனினும், சிறீ லங்கா பொது ஜன பெரமுனவுடனும் ஐக்கிய தேசிய கட்சியுடனும் பேச்சுகளை மேற்கொள்ளப்போவதில்லை. தற்போதைய ஒடுக்குமுறைகளை இரு கட்சிகளும் இணைந்து முன்னெடுப்பதாலேயே அவர்களுடன் பேச்சுகளை மேற்கொள்ளப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுடன் பேச்சுகளை நடத்த அழைப்பு விடுத்துள்ளோம். சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் விருப்பத்துக்கு அமைய செயல்படுகின்றது. இதனால் வசந்த முதலிகேயின் விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தில் சிவில் சமூகத்துடன் சேர்ந்து செயல்படுகின்றோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேர்தலை நடத்தாமல் அரசு பிற்போடுகிறது!

## அங்கஜன் எம். பி. கூறுகிறார்



யாழ்ப்பாணம், டிசெ. 21

பிரதேச சபை தேர்தல் நீண்ட காலமாக நடத்தப்படாமல் உள்ளது. இந்த நேரத்தில் மக்கள் எதோ ஒரு வகையில் அவர்களது அபிப்பிராயங்களை கேட்கவேண்டிய நிலை வந்துவிட்டது. ஆகையால் பிரதேச சபை தேர்தலை விரைவில் நடத்தினால் நன்றாக இருக்கும் என சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மஹாஜனா கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வலைப்பந்தாட்ட மைதானத்தை திறந்துவைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலை இப்போதைக்கு நடாத்தும் நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை. அவர்கள் தேர்தலை பிற்போடுவதற்குரிய வழிமுறைகளையே மேற்கொள்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல் ஆகியவற்றுக்கு காலம் இருக்கின்றபடியால் பிரதேச சபை தேர்தல் கண்டிப்பாக நடாத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு வேண்டுகோளை நாங்கள் முன்வைக்க முடியாது.

ஏனெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தால் யாப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து பெரும்பான்மை ஊடாக அவர் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார்.

அவரது ஆட்சி நிறைவுறுவதற்கு இன்னும் இரண்டரை வருடங்கள் உள்ளன. அந்த காலம் முடிந்த பின்னர் தான் தேர்தல் வைக்க வேண்டும் என்பது சட்ட ரீதியாக இருக்கிறது. ஆகவே உள்ளூராட்சி தேர்தலை விரைவில் நடத்துமாறு நாங்கள் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் - என்றார்.

கல்வி tv CHANNEL-1

**21.12.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**21.12.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பல்கலை. மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகித்து வந்தவர் பொலிஸாரால் கைது!

அம்பாறை, டிசெ. 21

அம்பாறை ஒலுவில் பிரதேசத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதை பொருள் விநியோகித்து வந்த வியாபாரியின் வீட்டை நேற்று முன் தினம் மாலையில் முற்றுகையிட்ட பொலிஸார், அங்கிருந்து கஞ்சா மற்றும் மாவா என்ற போதைப் பொருள் பெருமளவில் மீட்டதுடன் 41 வயதுடைய போதைப் பொருள் வியாபாரியை கைது செய்தனர்.



அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான ஒலுவில் பிரதேசத்திலுள்ள போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு வியாபாத்தில் ஈடுபட்டிருந்த 41 வயதுடைய வியாபாரியை கைது செய்ததுடன் கஞ்சா மற்றும் புகையிலை கலந்து 300 கிராம் தூள், மாவா என்றழைக்கப்படும் ஒன்றரைக் கிலோ போதைப்பொருள் மற்றும் கஞ்சாவை புகைப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒ.சி.பி. என்ற பொருள் 30 பெட்டி என்பவற்றை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட வியாபாரி இந்த போதைப்பொருளை நீண்ட காலமாக அந்த பகுதியிலுள்ள பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் மாணவர்களுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பு கமநல அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக ரமேஷ்

மட்டக்களப்பு, டிசெ. 21

மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான மாவட்ட கமநல அபிவிருத்தி நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் மட்டக்களப்பு கமநல திணைக்களத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத் தலைமையில் இடம்பெற்ற நிர்வாக சபைத் தெரிவுக்குழு கூட்டத்தில் 17 விவசாய கமநல அமைப்புக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 2023ம் ஆண்டிற்கான 34 உறுப்பினர்களைக் கொண்ட புதிய மாவட்ட கமநல அபிவிருத்தி நிர்வாக சபைத் தெரிவு ஏகமனதாக இடம்பெற்றுள்ளது.



2023ஆம் ஆண்டிற்கான மாவட்ட கமநல அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக அருளானந்தம் ரமேஷ் தெரிவு செய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக ச.சந்திரமோகன், புதிய பொருளாளராக இ.கிரேஸ்குமார், புதிய உபதலைவராக எம்.எஸ்.எம். பசீர், புதிய உப செயலாளராக ஜெ. நிறஞ்சன குமார் உள்ளிட்ட 29 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை இதன்போது தெரிவு செய்யப்பட்டது. (அ)

# மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழப்பு

மட்டக்களப்பு, டிசெ. 21

வாழைச்சேனை - நாவலடி இன்ஷானியா வீதி தக்வாப் பள்ளிக்கு அருகில் மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மரம் ஒன்று பிரதான மின் கம்பம் ஒன்றில் முறிந்து விழுந்ததில் மின் கம்பி அறுந்துள்ளது.

இதனால், அந்தப் பகுதியில் மேய்ந்து திரிந்த மாடுகளில் இரண்டு மாடுகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.

இச் சம்பவத்தில் அப் பகுதியால் சென்ற நபரொருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபையின் வாழைச்சேனை கிளைக்கு அறிவித்த போது சபை ஊழியர்கள் தாமதித்தே வருகை தந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.(அ)

# கல்முனை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடம் பெற்றுச் சாதனை!




அம்பாறை, டிசெ. 21

2020 ஆம் ஆண்டின் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளுள் கல்முனை ஆதார வைத்தியசாலை இரண்டாம் இடத்தை பெற்றுச்சாதனை படைத்துள்ளது.

குறித்த போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய நிறுவனங்களை விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தேசிய மட்டத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் கல்முனை ஆதார வைத்தியசாலையானது அரச திணைக்களங்களுக்கான பிரிவில், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது வைத்தியசாலைகள் பிரிவில் இந்த வைத்தியசாலைக்கு மாத்திரமே இரண்டாம் இடம் கிடைக்கப்பெற்றது.

இதைத்தவிர வேறு எந்த வைத்தியசாலைகளும் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விருதை பிரதமர் தினேஸ் குணவர்தன கலந்து கொண்ட நிகழ்வில் கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலா நிதி இரா.முரளீஸ்வரன் தலைமையிலான குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

# பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் நற்பிட்டிமுனையில் பாராட்டி கௌரவிப்பு



அம்பாறை, டிசெ. 21

நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் , நற்பிட்டிமுனை மண்ணிற்கு பெருமை சேர்த்த 2022 க. பொ. த. சாதாரண தர, க. பொ. த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசர் ஆலயம் மற்றும் நற்பிட்டிமுனை பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவர் த.ரவிராஜ் தலைமையில் நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலய மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். சரவணமுத்து கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக சிவசக்தி மகா வித்தியாலய அதிபர் தி.கண்ணபிரான், ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் வ.குலசேகரம், நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்ற தலைவர் கோ.சர்மா,

மேலும் நற்பிட்டிமுனை ஆலயங்களின் பிரதிநிதிகள்,இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள், நற்பிட்டிமுனை அறநெறிப் பாடசாலையின் அதிபர்,பெற்றோர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஒளி விழா!



மட்டக்களப்பு, டிசெ. 21

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஒளி விழா நிகழ்வு நேற்று முன் தினம் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை ஏ. நவரெட்ணம், அருட்தந்தை ஏ.எஸ்.சுபேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டொனால்ட் ட்ரம்ப் மீது 4 குற்றவியல் குற்றங்கள்

## தெரிவுக்குழு பரிந்துரை



நியூயோர்க், டிசெ. 21

2020 கபிட்டல் கலவரத்தை விசாரிக்கும் அமெரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய பரிந்துரை செய்துள்ளது.

தெரிவுக்குழு இதில் ஒருமித்த முடிவை எட்டியது. தெரிவுக்குழுவின் முழு அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது.

ட்ரம்ப் மீது கிளர்ச்சியைத் தூண்டுதல், உத்தியோகபூர்வ நடவடிக்கைக்கு இடையூறு செய்தல், அமெரிக்க அரசாங்கத்தை ஏமாற்ற சதி செய்தல் மற்றும் பொய்யான அறிக்கைகள் செய்தல் போன்ற குற்றச்சாட்டுகளை நீதித்துறைக்கு சமர்ப்பித்தது.

திங்களன்று அதன் கூட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, ஐந்து ஜனநாயகக் கட்சியினரும் இரண்டு குடியரசுக் கட்சியினரும் அடங்கிய ஏழு உறுப்பினர் குழு, அறிக்கையின் சுருக்கத்தை வெளியிட்டது.

ட்ரம்ப் தேர்தல் தோல்வியை முறியடித்து எப்படி அதிகாரம் செலுத்த முயன்றார் என்பதையும், அவருக்கு உதவ விரும்பாத எவருக்கும் அழுத்தம் கொடுப்பதையும் விரிவாக விவரிக்கிறது.

இன்று புதன்கிழமை முழு அறிக்கை பொதுமக்களுக்கு கிடைக்கும்.

அமெரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் கட்டாயமாக நீதித்துறை ஏற்கவேண்டிய அவசியமில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

நீதித்துறை சுயாதீனமாக இந்த பிரச்னையை விசாரித்தாலும் குற்றச்சாட்டுகளை புறக்கணிக்கவும் முடியும்.

குற்றவியல் நீதி அமைப்பு பொறுப்புக்கூறலை வழங்க முடியும் என்று குழுவின் தலைவர் பென்னி தோம்சன் கூறினார், மேலும், "இந்த குழுவின் பணி நீதிக்கான பாதை வரைபடத்தை வழங்க உதவும் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது" என்று ஏ.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தில் மக்கள் வாக்களிக்கும்போது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை ட்ரம்ப் உடைத்ததாக தோம்சன் குற்றம் சாட்டினார்.

"அவர் 2020 தேர்தலில் தோற்றார், அது தெரியும். ஆனால் முடிவுகளை மாற்றுவதற்கும் அதிகார பரிமாற்றத்தைத் தடுப்பதற்கும் பல பகுதி திட்டத்தின் மூலம் பதவியில் இருக்க அவர் முயற்சி செய்தார்" என்று தோம்சன் கூறினார்.

(அ)

# ஐ.நா. செயலாளர் குட்டரெஸ் ரஷ்யாவுக்கு பணிந்துவிட்டார்!

## அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டு

நியூயோர்க், டிசெ. 21

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் "வெளிப்படையாக ரஷ்ய அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்தார்" என்றும், ஈரானால் வழங்கப்பட்டதாகக் கூறும் ரஷ்யா பயன்படுத்தும் ட்ரோன்களை ஆய்வு செய்ய அதிகாரிகளை உக்ரைனுக்கு அனுப்பவில்லை என்றும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

உக்ரைனில் தனது படைகள் ஈரானிய ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தியதை ரஷ்யா மறுத்துள்ளது. அத்துடன், ட்ரோன்களின் தோற்றம் குறித்து விசாரிக்க ஐ.நா அதிகாரிகள் உக்ரைன் செல்ல எந்த ஆணையும் இல்லை என்று வாதிடுகிறது.

ஈரான் ரஷ்யாவிற்கு ட்ரோன்களை வழங்கியதாக ஒப்புக்கொண்டுள்ளது, ஆனால் பெப்ரவரியில் ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைன் மீது படையெடுப்பதற்கு முன்பு அவை அனுப்பப்பட்டதாகக் கூறியது.

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் ஈரானில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களை ரஷ்யாவுக்கு வழங்குவது ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தை உள்ளடக்கிய 2015 ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை மீறுவதாகக் கூறுகின்றன. ஐ.நா பொதுச் செயலாளர் குட்டரெஸ் உக்ரைனுக்கு குழு அனுப்பி விசாரிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

2015 ஈரான் அணுசக்தி ஒப்பந்தத் தீர்மானத்தின் மீது



திங்களன்று நடந்த பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் அமெரிக்க துணை ஐ.நா தூதர் ரொபர்ட் வுட் கூறுகையில், "இந்த அறிக்கை மீறல் குறித்து சாதாரண விசாரணையை மேற்கொள்ள ஐ.நா. நகரவில்லை என்று நாங்கள் வருந்துகிறோம்.

"ரஷ்ய அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்த செயலகம், இந்த சபை வழங்கிய விசாரணை ஆணையை நிறைவேற்றாததால் நாங்கள் ஏமாற்றமடைகிறோம்" என்று வூட் கூறினார்.

இந்த மாத தொடக்கத்தில் பாதகாப்பு கவுன்சிலுக்கு அளித்த அறிக்கையில், ஐ.நா அதிகாரிகள் கிடைக்கக்கூடிய தகவல்களை ஆய்வு செய்து வருவதாகவும், ஏதேனும் கண்டுபிடிப்புகள் இருந்தால் உரிய நேரத்தில் கவுன்சிலுக்கு தெரிவிக்கப்படும் என்றும் குட்டரெஸ் கூறினார்.

திங்களன்று அவர் எதிர்கொள்ளும் அழுத்தம் குறித்து கேட்டபோது, குட்டரெஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், உக்ரைனில் பயன்படுத்தப்படும் ஆளில்லா விமானங்களை ஈரான் ரஷ்யாவுக்கு வழங்கியது என்ற மேற்கத்திய குற்றச்சாட்டை, போரின் சூழலில் நாம் செய்கிற எல்லாவற்றின் பரந்த படத்தில், நாம் எப்போது செய்ய வேண்டும் என்பதன் அடிப்படையில் தீர்மானிப்போம் என்றார்.

ரஷ்யாவின் ஐ.நா. தூதர் வசிலி நெபென்சியா திங்களன்று பாதுகாப்பு சபையில், ஐ.நா அதிகாரிகள் மேற்கத்திய நாடுகளின் அழுத்தத்திற்கு பணியக்கூடாது என்றும் இந்த போலி விசாரணையின் முடிவுகள் எதுவும் செல்லாது என்றும் கூறினார்.

பாதுகாப்பு சபையால் தடை செய்யப்பட்ட எந்த பொருட்களையும் ஈரான் ரஷ்யாவுக்கு மாற்றவில்லை என்று ஈரானின் ஐ.நா தூதர் அமீர் சயீத் இரவானி கூறினார். பெப்ரவரிக்கு முன்னர் ரஷ்யாவிற்கு வழங்கப்பட்ட ஈரானிய ஆளில்லா விமானங்கள் சபையால் தடை செய்யப்படவில்லை என்றும், உக்ரைனில் நடந்து வரும் மோதலில் பயன்படுத்துவதற்கு மாற்றப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

(அ)

# பெலாரஸுடனான தனது எல்லைகளின் பாதுகாப்பை கடுமையாக்கும் உக்ரைன்!

கீவ், டிசெ. 21

ரஷ்யா புதிய தாக்குதலுக்கு தயாராகிவிடுமோ என்ற அச்சத்தில் பெலாரஸுடனான தனது எல்லைப் பாதுகாப்பை உக்ரைன் கடுமையாக்குகின்றது.

உக்ரைன் ஆயுதப்படைகள் மற்றும் வெடிமருந்துகள் மூலம் பெலாரஷ்யன் எல்லையை வலுப்படுத்தும் என துணை உள்துறை அமைச்சர் யெவ்ஹென் யெனின் தெரிவித்துள்ளார்.

விளாடிமிர் புடின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோவைச் சந்திக்க மின்ஸ்க் நகருக்குச் சென்றுள்ள நிலையில், இந்தச் செய்தி வந்துள்ளது.

பெலாரஸ், ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் ஒரு எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

ரஷ்ய ஜனாதிபதி பின்னர் ரஷ்யாவின் எல்லைகளை வலுப்படுத்தவும் ரஷ்யாவிற்குள் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் உத்தரவிட்டார். ரஷ்யாவின் எல்லைகளை மீறும் எந்தவொரு முயற்சியையும், வெளிநாட்டிலிருந்து வரும் அபாயங்களை எதிர்த்துப் போராடவும், துரோகிகளையும் நாசகாரர்களையும் அடையாளம் காணும் எந்தவொரு முயற்சியையும் பாதுகாப்பு சேவைகள் விரைவாக முறியடிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

ரஷ்யா தனது சொந்தம் என்று கூறும் உக்ரைனின் பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்பை சிறப்பு சேவைகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பெலாரஸில் நிலைகொண்டுள்ள தனது துருப்புக்கள் பெலாரஸுடன் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளும் என ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பெலாரஸ் நேரடியாக போரில் ஈடுபடவில்லை என்றாலும், பெப்ரவரியில் படையெடுப்பைத் தொடங்க ரஷ்ய துருப்புக்கள் அதன் பிரதேசத்தைப் பயன்படுத்த அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கட்டுப்பாடுகளை தளர்த்தியதால் சீனாவில் கொரோனா அதிகரிப்பு



பீஜிங், டிசெ. 21

சீனா விதித்துள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையடுத்து, சீனாவில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் இறப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று முதியோர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

சீன மக்கள் தொகையில் 90 வீதத்திற்கும் அதிகமானோர் தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும், 57.9 வீதமான முதியோர்கள் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

பொது முடக்கத்தை தளர்த்துதல் மற்றும் கொரோனா பரிசோதனைகளை கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான இறப்புகள் ஏற்படும் ஆபத்து உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக, ஷாங்காய் பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலைகளின் உள்ளக அரங்கங்கள் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(அ)



## எல். பி. எல். இருபது - 20 யாழ்ப்பாணம் வெற்றி!

கொழும்ப, டிசெ. 21

கொழும்பு ஸ்ரார்ஸ் அணியை 8 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி.

கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடந்த எல். பி. எல். தொடரில் கொழும்பு ஸ்ரார், யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிகள் மோதின.

கட்டுப்பாடான பந்துவீச்சுகளும் ரஹ்மானுல்லா குவித்த அரைச் சதமும் யாழ்ப்பாணம் அணியின் வெற்றிக்கு அடிகோலின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ரார்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் 4 ஓவர்களுக்குள் 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து கொழும்பு அணி பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. ஆனால், டொமினிக் ட்ரேக்ஸ் (38), நிஷான் மதுஷ்க (35), ரவி போப்பரா (20) ஆகிய மூவரும் ஓரளவு திறமையை வெளிப்படுத்தி ஓரளவு போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையை அணி பெற உதவினர்.

யாழ்ப்பாணம் கிங்ஸின் பந்துவீச்சில் ஷொகைப் மலிக் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் திஸர பெரேரா 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

129 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்பாணம் கிங்ஸ் 15.5 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ரஹ்மானுல்லா குர்பாஸ் 40 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 69 ஓட்டங்களைக் குவித்ததுடன் அவிஷ்க பெர்னாண்டோ ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றார். அவர்கள் இருவரும் 71 பந்துகளில் 105 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

தொடர்ந்து அவிஷ்கவும் சதீர சமரவிக்ரமவும் (9 ஆ.இ.) பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி அணியின் வெற்றியை உறுதி செய்தனர். (ஐ)

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது இங்கிலாந்து

கராச்சி, டிசெ. 21

கராச்சியில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்திடம் பாகிஸ்தான் அணி தோல்வியை தழுவியது. இதையடுத்து, பாகிஸ் தானை அதன் சொந்த மண்ணில் 3-0 என்ற கணக்கில் தோற்கடித்து டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளது ஸ்ரோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி.

பாகிஸ்தான் - இங்கிலாந்து இடையேயான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொட ரில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து ஏற்கனவே வெற்றி பெற்றிருந்தது.

இந்நிலையில், மூன்றாவது டெஸ்ட் போட்டி கராச்சியில் நடைபெற்றது. இதில், முதல் இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 304 ஓட்டங்களை எடுக்க, இங்கிலாந்து அணி 354 ஓட்டங்களை எடுத்திருந்தது. 2ஆவது இனிங்ஸில் பாகிஸ்தான் 216 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்த போட்டியில், 18-வயதே நிரம்பிய இங்கிலாந்தின் ரேஹான் அகமது என்ற இடது கை சுழல் பந்து வீச்சாளர் 5 விக் கெட்களைக் கைப்பற்றி மிகக் குறைந்த வயதில் அறிமுகப் போட்டியில் 5 விக்கெட்களை எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார்.

167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய இங்கிலாந்து, பழைய பாணியில் நிதானித்து ஆடாமல், அதிரடியாக ஆடியது. 17 ஓவர்க ளில் 112/2 என்ற நிலையில், நேற்றுமுன்தினம் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

நேற்று காலை வந்தவுடன் பென் ஸ்ரோக்ஸ், பென் டக் கெட் அவசரம் காட்டி இலக்கை எட்டி 3-0 என வெள்ளையடிப்பை நிறைவு செய்தனர்.

நேற்றுமுன்தினம் தொடக்க




வீரர் ஜாக் கிராலி 41 பந்துகளில் 7 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் விளாசி அப்ரார் அக மதுவிடம் எல்.பி. டபிள்யூ வாகி வெளியேறினார். இதை யடுத்து ரேஹன் அகமதுவை இறக்கியது இங்கிலாந்து. அவர் வந்தவுடனேயே இறங்கி வந்து சிக்ஸர் விளாசினார். 2 பௌண்ட்ரிகளுடன் 8 பந்துகளில் 10 ஓட்டங்கள் எடுத்த ரேஹன் அகமது அதிக நேரம் நீடிக்கவில்லை. அப்ரார் பந்தில் போல்ட் ஆகி வெளியேறினார்.

நேற்று பென் ஸ்ரோக்ஸ், பென் டக்கெட் வெற்றியை நிறைவு செய்தனர். பென் ஸ்ரோக்ஸ் தனது தலைமையில் கடைசி 10 டெஸ்ட் போட்டி களில் 9இல் வெற்றி பெற்றுள்ளார். இவர், ஸ்ரீவ் வோவின் தொடர் டெஸ்ட் வெற்றி சாதனையை எட்டிப் பிடிக்கும் நோக்கில் பயணித்து வருகிறார். அடுத்த ஆஷஷ் தொடரில் இந்த பிரெண்டன் மக்கலம் ஃ பென் ஸ்ரோக்ஸ் அதிரடி முறைக்கு அவுஸ்திரேலியா செக் வைத்தால் தான் உண்டு.

பென் ஸ்டோக்ஸ் தலைவராவதற்கு முன்பாக 17 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் மட் டுமே இங்கிலாந்து வென்றி ருந்தது. ஸ்ரோக்ஸ் ஃ மக்கலம் கூட்டணி இங்கிலாந்து கிரிக்கெட் அணுகுமுறையில் சட்டக மாற்றத்தை, சிந்தனை மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. அதோடு, ஒட்டு மொத்தமாக டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின் போக்கையும் அது மற்றி வருவதால், பிற அணிகள் தங்களை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளன.

இங்கிலாந்தின் இந்த புதிய அணுகுமுறைக்கு 'Bazball' (பாஸ்போல்) என்று கிரிக்கெட் உலகில் செல்லப்பெயர் இடப் பட்டுள்ளது. அதாவது பிரெண் டன் மக்கலமின் செல்லப்பெயர் 'Baz' ஆகும். இந்த புதிய அணுகுமுறையின் முதல் களபலியாக நியூசிலாந்து 3-0 என்று உதை வாங்கியது. அடுத்தபடியாக இந்தியா 378 ஓட்டங்களை 4ஆவது இனிங்ஸில் விரைவு கதியில் இங்கிலாந்தை அடிக்க விட்டது. பிறகு தென்னாபிரிக் காவுக்கு 2-1 என்று இதே பாஸ் போல் செல்வாக்கு செலுத் தியோ. இப்போது பாகிஸ்தான் வாங்கிக் கட்டியுள்ளது. (ஐ)

## அறிமுகப் போட்டியிலேயே 5 விக்கெட் வீழ்த்திய அஹமது



கராச்சி, டிசெ. 21

பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஒரே இனிங்ஸில் 5 விக்கெட்களை கைப்பற்றி அசத்தியுள்ளார் இங்கிலாந்து அணியின் இளம் பந்துவீச்சாளர் ரெஹன் அகமது. முதல் இனிங்ஸில் அவர் 2 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். ஒட்டு மொத்தமாக இந்தப் போட்டியில் 7 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

இவர் கடந்த ஜனவரி 2022இல் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணிக்காக விளையாடி இருந்தார். இந்தச் சூழலில் 18 வயதான அவர் அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதன் மூலம் ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகப் போட்டியில் ஒரே இனிங்ஸில் 5 விக்கெட்களை கைப்பற்றிய இளம் பவுலர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட அகமது, கராச்சியில் தற்போது நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் ஆடும் பதினொருவர் அணியில் அகமது சேர்க்கப்பட்டார். இரண்டாவது இனிங்ஸில் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம், முகமது ரிஸ்வான் உட்பட 5 துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஓய்வு பெற்றார் கரீம் பென்சிமா

பாரிஸ், டிசெ. 21

சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் இருந்து பிரான்ஸின் நட்சத்திர வீரர் கரீம் பென்சிமா ஓய்வு பெறுவதாக நேற்றுமுன் தினம் அறிவித்தார்.

இந்த அறிவிப்பை அவர் தனது சமூகவலைத்தளம் மூலமாக வெளியிட்டார்.

35 வயதான பென்சிமா கத்தாரில் நடந்த உலகக் கிண்ணப் போட்டிக்கான பிரான்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார். ஆனால், காயம் காரணமாக அவர் கடைசி நேரத்தில் அணியிலிருந்து விலகினார்.

2007-ம் ஆண்டு சர்வதேச போட்டியில் அறிமுகமான பென்சிமா 97 போட்டிகளில் ஆடி 37 கோல்கள் அடித்துள்ளார். அவர் இந்த ஆண்டின் உலகின் சிறந்த வீரர் விருது பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# 370 வகை மருந்து பொருள்களை இலங்கைக்கு வழங்கும் இந்தியா

## அமைச்சர் கெஹலிய தகவல்



கொழும்பு, டிசெ. 21

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் 370 வகையான மருந்துகளை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இது குறித்து தகவல்களை வெளியிட்டார்.

இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ள குறித்த 370 வகை மருந்துப் பொருட்களும் அடுத்த மாதம் நாட்டை வந்தடையும் என அமைச்சர் கூறினார்.

இதேவேளை, நாட்டுக்கு மிக அத்தியாவசியமான 14 வகை மருந்துகளில் ஏழு வகை மருந்துகளை ஒருவருட தேவைக்காக இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சீனாவிலிருந்து கிடைக்கப்பெறும் மேற்படி மருந்துப்பொருட்கள் விரைவில் நாட்டுக்கு கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் மருந்துகள் தொடர்பில் சில சில அசௌகரியங்கள் நிலவுவதைத் தாம் ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்ட அமைச்சர், எவ்வாறாயினும் மருந்துப்பொருள் இறக்குமதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து முடியுமானளவு அதனை முறையாக முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மருந்துப் பொருட்கள் தொடர்பில் எத்தகைய தகவல்களையும் மறைப்பதில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அனைத்து தகவல்களையும் பாராளுமன்றத்துக்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைக்கு தேவையான அனைத்து மருந்துகள் தொடர்பான பட்டியலொன்றை இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்(அ)

# 14 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடையும்

கொழும்பு, டிசெ. 21

ஏற்கனவே கோரப்பட்ட விலைமனுவிற்கு அமைய, 14 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் பணிப்பாளர் நாமல் ஹேவகே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதுவரை 5 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் நிலக்கரியை கொண்டுவருவதற்கான விலைமனு நிராகரிக்கப்பட்டதையடுத்து, வேறு முறைமையின் மூலம் மேலும் மேலும் 12 நிலக்கரி கப்பல்களை நாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது

3 நிலக்கரி கப்பல்கள் மூலம் 3 இலட்சம் மெற்றிக் தொன் நிலக்கரி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன் மேலும் 28 நிலக்கரி கப்பல்களைக் கொண்டுவர தயாராகுவதாக அவர் மேலும் கூறினார். (அ)



# இருட்டுமடு மாணவர்களுக்கு இணைந்த கரங்களின் உதவி

முல்லைத்தீவு, டிசெ. 21

இணைந்த கரங்கள் அமைப்பினால் முல்லைத்தீவு இருட்டுமடு தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 76 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது பாடசாலையின் அதிபர் குணசிங்கம் உதயகுமார் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி சின்னையா பாஸ்கரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மேலும் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் சிவபாலன் சுதாகரன், முன்னாள் அதிபர் துரைசிங்கம் யோகராசா . ஆசிரியர் குலசூரியன் சூர்யப்பிரகாஸ், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள்,இணைந்த கரங்கள் உறுப்பினர்களான பெ.விவேகானந்த ன்,லோ.கஜரூபன், எஸ்.காந்தன், நா.சனாதனன், ப.சஜிந்தன், கோ.சிவானந்தம், மு.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணைந்த கரங்கள் அமைப்பினரால் முல்லைத்தீவு இருட்டுமடு தமிழ் வித்தியாலய பாடசாலையில் தரம் 01 தொடக்கம் தரம் 09 வரை கல்விகற்கும் 76 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் இணைந்த கரங்கள் உறவுகளினால் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை, பாதணிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில் 01.08.1930**

**விண்ணில் 21.12.2021**

## அமரர்

## சின்னத்தம்பி தியாகராஜா STR

**ஸ்தாபகர்: எஸ். ரீ. ஆர். பிலிம்ஸ்**

**ராஜா டாக்கீஸ் & ராஜா 2 சினிமா - யாழ்ப்பாணம்**
**சரஸ்வதி டாக்கீஸ் - திருகோணமலை**
**சாந்தி சினிமா & சுகந்தி சினிமா - மட்டக்களப்பு**
**வசந்தி சினிமா & அமுதா சினிமா - வவுனியா**

கடவுளாய்க் காண்கிறோம் காத்திடுவீர் காலமெல்லாம்

ஆண்டொன்று மின்னலாய்க் கடந்தது ஆயினும்
சற்றேனும் ஆறவில்லை எங்கள் மனம்

பாசத்தால் பிணைந்த எங்கள் வாழ்வும்
நேசத்தால் மிளிர்ந்த எங்கள் பந்தமும்
நீண்டு நிலைத்திருக்கும் எம்மோடு என
நாங்கள் தான் நினைத்து இருந்தோம்
காலனிட்ட கணக்கோ எதிர்மறையாய்ப் போயிற்றே
நீங்கா நினைவுகளை எம்மோடு விட்டுவிட்டு
வெகுதூரம் சென்றுவிட்ட உங்களை நாம்
ஒருமுறை தன்னும் கண்முன்னே காண்பதற்காய்
இக்கணமும் எக்கணமும் துடியாய்த் துடிக்கின்றோம்

காலமெலாம் காவலனாய் காத்திடுவீர் நீங்களென
கடவுளாய்க் காண்கின்றோம் காத்திடுவீர் காலமெல்லாம்.



**மனைவி, பிள்ளைகள்,**
**குடும்பத்தினர்**

## போதைப்....

கிடைக்கின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரம் செய்யும் பெரும் புள்ளிகளைச் கைது செய்யாமல், சரியான ஊட்டச்சத்துகூட இல்லாத பாடசாலை மாணவர்களின் பைகளைச் சோதனை செய்வது வேடிக்கையானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் 45ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்றை நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

இதன்போது உரையாற்றிய அவர், "பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, பெற்றோருக்கு உணவளிக்க வழியில்லாத நிலையில், பாடசாலை பைகளைப் பரிசோதிப்பதை விடுத்து, அவர்களுக்குச் சரியான போசாக்கை அளிக்கும் திட்டத்தைத் தயாரிப்பதே அரசின் பணியாக இருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்நாட்டில் உள்ள 43 இலட்சம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் பாடசாலை காலத்தில் போசாக்கான உணவுவேளை வழங்கப்படும்.

இரண்டாம் உலகப் போரின் போது, ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அணு குண்டுகள் வீசப்பட்ட போது, அந்நகரங்களில் பெரும் அழிவுகள் நிகழ்ந்த போதிலும், நவீன உலகுக்கு ஏற்ற கல்வி முறையை நடைமுறைப்படுத்தியதன் மூலம் ஜப்பான் மீண்டும் தலைதூக்கி உலகின் சக்தி வாய்ந்த நாடாக மாறியது.

பின்லாந்து போன்ற நாடுகள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னோக்கிய கல்வித் திட்டங்களை உருவாக்கி மேம்பட்ட கல்வி பயணத்தை செயற்படுத்தி வருகின்றது. கல்வியை வலுப்படுத்தியதன் மூலம் வியட்நாம் போன்ற நாடுகள் தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் துறையில் பெரும் முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

காலங்காலமாக, நம் நாட்டில் ஒரு மனப்பாட கல்வி முறையே உள்ளது. நம் நாட்டுக்குப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் கல்வி முறையே தேவைப்படுகின்றது. போசாக்கு இல்லாத ஒரு சமூகமாக இந்தப் பாடசாலை மாணவர்கள் உருவெடுத்துள்ளார்கள். அவர்களுடைய சாப்பாட்டுப் பெட்டிகளைப் பரிசோதனை செய்வதை விட்டு அவர்களுக்கு எவ்வாறான திட்டங்களை வழங்க முடியும் என்று அரசு கருத்தில்கொள்ள வேண்டும்.

ரணசிங்க பிரேமதாஸ இந்த நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் இலவச உணவு, இலவச சீருடைத் திட்டங்களை வழங்கிய ஒரு ஜனாதிபதியாவார். இலங்கையர்களாக சகோதரத்துவத்தோடு, நட்புறவோடு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மனோ பாவத்துடன் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

இலங்கை சிறந்தது என்பது எங்களுடைய ஒரு வேலைத்திட்டமாக இருக்கின்றது. இருநூற்று இருபது இலட்சம் மக்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த நாட்டை உலகில் முதலிடத்துக்கு ஸ்தாபனப்படுத்துவதே எங்களுடைய கருத்திட்டம்" - என்றார். (ஐ)

## காலநிலை....

முதலீட்டாளர்களை இலங்கைக்கு வரவழைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தியின் 70 சதவீத இலக்கை அண்மித்தல், 2050இற்குள் காபன் மத்திய நிலையை எட்டுதல், காபன் வெளியேற்ற அனுமதி பத்திரத்துக்கு பதிலாக சர்வதேச சந்தையைக் கண்டறிவது ஆகிய மூன்று இலக்குகளையும் அடைவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைப்பதே அரசின் திட்டம் ஆகும்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன மற்றும் சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

எதிர்கால எரிசக்தி ஆதாரங்கள், காபன் வெளியேற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஐதரசன் போன்றவற்றின் மீதான தனது சர்வதேச அறிவை சொல்ஹெய்ம் இந்தக் கலந்துரையாடலுக்கு வந்திருந்த அதிகாரிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பில் கருத்து தெரிவித்த எரிக் சொல்ஹெய்ம், இந்தியா, சீனா போன்ற நாடுகள் இதன் மூலம் அதிக நன்மைகளை பெற்றிருப்பதாகவும் அதே நன்மைகளை இலங்கையாலும் பெற முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்னைகளையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தீர்த்து வைப்பார் என தாம் நம்புவதாகவும் சொல்ஹெய்ம் மேலும் சுட்டிக்காட்டினார்.

இங்கு உரையாற்றிய காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன, புதுப்பிக்கத்தக்க சக்தி மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறை என்றும், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட ஏனைய நாடுகளில் இத்துறை சார்ந்த முதலீட்டாளர்கள் அதிகளவில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே இலங்கை மக்கள் பயன்பெறும் வகையில் அவ்வாறான முதலீடுகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ருவன் விஜயவர்தன, கொள்கைகளை உருவாக்கும் போது இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும், புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான மாநாடு ஒன்றை எதிர்காலத்தில் நடத்தவிருப்பதாகவும் அதன் ஊடாக முதலீட்டாளர்களை எமது நாட்டுக்கு ஈர்க்க முடியும் என நம்புவதாகவும் ருவான் விஜயவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கை....

டத்தில் நேற்று அவர் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

"இலங்கை தலைவர்களுடன் பிரதமர் மோடி பலமுறை பேசியுள்ளார். இலங்கையில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று விடுவிக்கப்படுகிறார்கள் என்றால், அது சென்னையில் யாரோ கடிதம் எழுதுவதால் அல்ல. ஆனால், டில்லியில் உள்ள ஒருவர் இந்த விசயத்தை எடுத்துக் கொள்வதால்தான்.

2014 ஆம் ஆண்டுமுதல் இலங்கையால் கைது செய்யப்பட்ட 2 ஆயிரத்து 835 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்களின் பிரச்னைகளில் மோடி கவனம் செலுத்தியுள்ளார்.", என்றும் கூறினார்.

இதேசமயம், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றமைக்கு இந்திய பிரதமர் தாமதமாகவே வாழ்த்து அனுப்பினார். எனினும், அவர் ஜனாதிபதியை இந்தியாவுக்கு அழைக்கவில்லை. இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணிலுடன் தொடர்பில் உள்ளார் என்று கூறியிருப்பது முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் - 07இல்)

## தேவை....

னாலும், இப்போதைக்கு உகந்தது ஜனாதிபதித் தேர்தலே.

ஜனாதிபதி தேர்தலில் நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்னிறுத்தப்படுவார் என்று கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார். (ஐ)

# சம்பந்தனை சாட்சியாக்கி நீதிமன்றில் இனப்படுகொலையாளிகளை நிறுத்துக!

வவுனியா, டிசெ. 21

"காணாமல் ஆக்கப்பட்டோரை கொன்றுவிட்டீர்கள் என்பது எனக்கு தெரியும்", என சம்பந்தர் கூறியுள்ளார். அவரே ஒரு சாட்சியாக உள்ளார். எனவே, அவரை ஒரு சாட்சியாக கொண்டு இந்த இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் சி. ஜெனிட்டா தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இழப்பீட்டை வழங்க வேண்டும் என கூறியுள்ளார். நாங்கள் இவருக்கும் ஆணைக்குழுக் களுக்கும் கூறியுள்ளோம் எமக்கு இழப் பீடுகளை தேவையில்லை என்று.

யுத்தம் முடிந்து 13 வருடமாக நாம் போராடிக்கொண்டிருக்கும் போது இலங்கை தேசத்தில் நீதி கிடைக்காத நிலையில் சர்வதேசத்தின் நீதியை கோரி போராடி வருகின்றோம். எனவே, இனப்படுகொலை செய்தவர்களை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தி நீதியை பெறவேண்டும். (ஐ-05)

## அரசாங்கத்துக்கு....

டின் அங்கீகரிக்கப்பட்ட வல்லுநர்கள் பலர் ஒன்றிணைந்துள்ளனர். இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் மற்றும் அரசியல் குழுக்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிய வருகின்றது.

எது எப்படி இருப்பினும் இந்த பெரும் கூட்டில், "தேர்தல் அவசியமில்லை", என்று அறிக்கை வெளியிடும் பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, மௌனம் சாதிக்கும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.) கட்சிகளை இணைத்துக் கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன்படி, உள்ளூராட்சி தேர்தலை நடத்தக் கோரி அரசாங்கத்துக்கு எதிராக பெரும் கூட்டணியை உருவாக்குவதுடன், தேவையான நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பிலும் பேச்சு நடத்தவும் இந்தக் குழு முடிவு செய்துள்ளது என்றும் அறிய வருகிறது. (ஐ)

## திடீர்....

கக் கடந்த 13ஆம் திகதி சர்வகட்சி மாநாடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் நடைபெற்றது.

இந்த நிலையில், இலங்கை வந்துள்ள நோர்வேயின் முன்னாள் விசேட தூதுவரும் சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் தற்போதைய ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் அரசியல் கட்சிகளை அண்மைநாட்களாக சந்தித்து வருகிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசிய அவர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் எம். பி. ஆகியோரை சந்தித்து உரையாடினார்.

தொடர்ந்து, நேற்றைய தினம் ஜனாதிபதி தரப்பையும் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார்.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோருக்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து இன்று மாலை சந்திப்பு நடைபெறும் என்றும் அதில் பங்கேற்கு மாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தக் கூட்டம் உத்தியோகப் பற்றற்ற சந்திப்பாகவே நடைபெறும் என்றும் கூறப்பட்டது.

இந்த சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

எனினும், இந்தச் சந்திப்பில், க. வி. விக்னேஸ்வரன், த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்பது தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. காரணம், இவர்கள் நேற்றுமுன்தினம் இரவே, தமது மாவட்டங்களுக்கு திரும்பியிருந்தனர். இதனால், அவர்கள் கூட்டத்தில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனினும், இன்று மாலையே சந்திப்பு என்பதால் சிலர் இந்த சந்திப்பில் பங்கேற்கவும் வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டது. (ஐ)

## எந்தத்....

மக்கள் சக்தி உடன்படாது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலே நடத்தப்பட வேண்டியது என்று ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த கருத்துக்கு பதிலளிக்கும்முகமாகவே இந்தக் கருத்தை ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். (ஐ)

## யாழ். மாநகர....

புக்கு ஆதரவு அளித்து வரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.) வரவு - செலவு திட்டத்தை எதிர்ப்பது என்று முடிவு எடுத்துள்ளதாக அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றைய தினம் ஈ. பி. டி. பி. கட்சியின் தலைவருக்கும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிய வருகின்றது.

இதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் வரவு - செலவு திட்டத்தை எதிர்ப்பர் என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் எம்மிடம் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் முதல்வர் இ. ஆர்னல்ட் இரு தடவைகள் சமர்ப்பித்த பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல்வராக தெரிவானார்.

ஈ. பி. டி. பி. கட்சியின் ஆதரவுடனே அவரின் ஆட்சி கடந்த காலத்தில் தொடர்ந்து வந்தது. இந்நிலையில், இம்முறை வரவு - செலவு திட்டத்தை அந்தக் கட்சி எதிர்க்க முடிவு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## 10 மணிநேர....

நிறுவனமே நிலக்கரி வழங்கலை செய்து வருகிறது. இதுவரை 60 ஆயிரம் தொன் - 20 கப்பல் நிலக்கரிக்கு விலை மனு கோரப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை 5 கப்பல் நிலக்கரியே நாட்டுக்கு வந்துள்ளது. ஆறாவது கப்பல் வருவதற்கு ஓரிரு வாரங்கள் செல்லும்.

எனவே, அடுத்த நிலக்கரி கப்பல் வந்து சேரும்வரை கையிருப்பிலுள்ள நிலக்கரி மூலம் இரு மின்பிறப்பாக்கிகளையே இயக்க முடியும். இதனால், 300 மெகா வோட்ஸ் மின்சாரம் தேசிய கட்டமைப்புக்கு கிடைக்காமல் போகும். எனவே, தற்போது 2 மணித்தியாலம் 20 நிமிடங்கள் நீடிக்கும் மின் துண்டிப்பு இரு மடங்காக நீடிக்கப்பட வேண்டும்.

எனினும், அடுத்த கப்பல் வர மேலும் ஓரிரு வாரம் எடுத்தால், மற்றொரு மின்பிறப்பாக்கியையும் நிறுத்த வேண்டியிருக்கும். இதனால், 10 மணி நேர மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த நேரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் மின் உற்பத்தி நிலையம் ஒன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளது. எந்த உடன்படிக்கை செய்யப்பட்டாலும் 45வீத பங்குகளை பெற்ற இந்தியாவோ அல்லது சீனாவோ நாட்டை ஆட்டம் காண செய்ய முடியும். இதற்கு இடமளிக்காது அதன் அபாயத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு சஜித்தால் பேருந்து அன்பளிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 21

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத் தப்படும் பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் 45ஆவது கட்டமாக 50இலட்சம் ரூபாய் பெறு மதியான பாடசாலை பஸ் ஒன்று கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நேற்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை நிர்வாகத்திடம் பஸ்ஸை எதிர்க்கட்சித் தலைவர் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் விஜயராஜன் உள்ளடங்கலான கட்சியின் முக்கி யஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். (ஐ)



# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, டிசெ.21

இரத்தினபுரி பாதையின் கடகரெல்ல பாலத்துக்கு அருகில் கார் சாரதி ஒருவர் கைகள் மற்றும் வாய் துணி யால் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

48 வயதுடைய மினுவாங்கொடை, கல்லொழுவை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித் துள்ளனர். பாணந்துறை - இரத்னபுரி வீதியில் கடக ரெல்ல பாலத்துக்கு அருகில் இனந்தெரியாத ஆண் ஒரு வரின் சடலம் காணப்பட்டமை தொடர்பில் ஒருவர் இங்கிரிய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வாடகை வாகனத் தில் சென்ற தனது சகோதரர் தொடர்பில் எவ்வித தகவலும் இல்லை என உயிரிழந்தவரின் சகோதரர் மினு வாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து இங்கிரிய பொலிஸாரால் இனந் தெரியாத சடலம் ஒன்று இருப்பதாக முறைப்பாட்டா ளருக்கு அறிவித்ததன் பேரில் ஹொரண வைத்திய சாலைக்குச் சென்ற அவரது சகோதரர் சடலத்தை அடையாளம் காட்டியுள்ள நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தினேஷ் ஷாப்டர் படுகொலை; மனைவியிடமும் வாக்குமூலம்

## 40 பேரிடமும் விசாரணை

கொழும்பு, டிசெ.21

தனியார் காப்புறுதி நிறுவனத்தின் பணிப்பாளரான பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் படுகொலை தொடர்பாக அவரது மனைவியிடமும் குற்றப் புலனாய் வுப் பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் மாலை 4 மணித்தியாலங்களுக்கு மேலாக அவரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

தினேஷ் ஷாப்டர் கொலைச் சம்பவம் தொடர்பில் 15 பேர் சந்தேகிக்கப்படுகின்றனர் என்று குற்றப் புலனாய் வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையில் 40 இற்கும் மேற்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட் டுள்ளது எனவும், ஷாப்டரின் நெருங்கிய உறவினர்கள் சிலர் குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது என வும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வவுனியாவில் கன மழை! வீடுகளுக்குள் வெள்ளம்!!



வவுனியா, டிசெ. 21

வவுனியாவில் பெய்து வரும் கனமழை காரணமாக 5 வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வவுனியாவில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை அதிகாலை முதல் மழை பெய்து வருகின்றது. மழை காரணமாக குளங்க ளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக, வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் 5 வீடுகள் அதிகமாக பாதிப்படைந்துள்ள துடன், மேலும் பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உட் புகுந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த வீடுகளில் வசித்து வரும் மக்கள், நோயாளர்கள், மாணவர்கள், குழந்தைகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மக்களின் நிலைமை தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் கவனம் செலுத்தியுள்ளது. (அ)

# புலம்பெயர் இலங்கையர் விவகாரத்தை கையாள்வதற்கென புதிய அலுவலகம்

கொழும்பு, டிசெ. 21

புலம்பெயர்வாழ் இலங்கையர்க ளின் ஒத்துழைப்புக்களை இலங் கைக்குப் பெற்றுக் கொள்வதற்காக மத்திய ஒருங்கிணைப்பு நிலைய மாக நடவடிக்கைகளை மேற்கொள் வதற்காக புலம்பெயர்வாழ் இலங் கையர் விவகாரங்களுக்கான அலுவ லகத்தை நிறுவுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட யோசனையில் முன்மொழிந்திருந் தார்.

அதற்கமைய, வெளிநாடுகளில் வாழ்கின்ற 03 மில்லியன் இலங்கை யர்களின் ஒத்துழைப்புக்களை எமது நாட்டின் அபிவிருத்திக்காக பெற் றுக்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 'புலம்பெயர்வாழ் இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகத்தை' ஜனாதிபதி செயல கத்தின் கீழ் நிறுவுவதற்கும், குறித்த அலுவலகத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக மேற்கொண்டு செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது. (அ)

# 5 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும் அநுராதபுரம் - வவுனியா ரயில் சேவை

கொழும்பு, டிசெ.21

அநுராதபுரம் - வவுனியா ரயில் சேவைகள் திருத்தப் பணிகளுக்காக ஜனவரி 5 ஆம் திகதி முதல் ஐந்து மாதங் களுக்கு மூடப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அன்றிலிருந்து ஐந்து மாதங்களுக்கு கொழும்பு கோட்டையில் இருந்து அநுராதபுரம் மற்றும் அநுராத புரத்தில் இருந்து கோட்டை வரை மட்டுமே புகையிரதங்கள் இயங்கும்.

இந்த நாட்களில் அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரை பயணிகளின் வசதிக்காக பேருந்து சேவை வழங் கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து முறுக்கண்டி வரை பயணிக்கும் புகையிரதம் இதே ஐந்து மாத காலப்பகு திக்குள் வவுனியா வரை இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# படகு கவிழ்ந்து மீனவர் மாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 21

பலாலியை சேர்ந்த மீனவர் ஒருவர் மயிலிட்டி கட லுக்கு சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார். அவரது படகு கவிழ்ந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

பலாலி அன்ரனிபுரத்தை சேர்ந்தரொபர்ட் கெனடி (வயது-54) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே நேற்று அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

இவரை மீனவர்கள் தேடிய நிலையில் கிடைக்க வில்லை. இந்நிலையில் அவரின் படகு கவிழ்ந்த நிலை யில் கரையை நோக்கி அடித்து வரப்பட்டது. இதை அவதானித்த மீனவர்கள் அவரின் படகு, வலைகளை மீட்டனர்.

காணாமல் போன மீனவரை தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட போதும் எந்த பலனும் கிட்ட வில்லை - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போதைப்பொருளிலிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி

கொழும்பு, டிசெ. 21

போதைப்பொருள் பாவனை யிலிருந்து பாடசாலை மாணவர் களை பாதுகாக்க ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை ஆரம்பிக்கும் நோக் கில் விசேட கலந்துரையாட லொன்று இடம்பெற்றுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போதைப்பொருள் பாவனையி லிருந்து பாடசாலை மாணவர்களை மீட்பது தொடர்பில் இங்கு விவா திக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை, முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் 200 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங் கப்படவுள்ளது எனவும் தெரி விக்கப்பட்டது.

அத்துடன் அண்மையில், மேல் மாகாணத்தில் பாடசாலை மாண வர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் தொடர்பில் மேற்கொள் ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 75 சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.